
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 31 வெள்ளிக்கிழமை (15.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 240

## வடக்கில் இடம்பெயரும் மக்கள் பேரவலத்தை சந்திக்க நேரலாம்

### ஐ.நா.மன்றம் எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த இரண்டரை மாத கால கட்டத்தில் வட இலங்கையில் சுமார் 75 ஆயிரம்பேர் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற நேர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள மக்களின் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை இது. விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அரசாங்கத் துருப்பினர் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்.

புலிகளை முழுமையாக வீழ்த்தி அப்பிரதேசங்களை முற்றிலுமாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடவேண்டும் என்று அவர்கள் எண்ணம் கொண்டுள்ளனர்.

மோதல்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மினி சூறாவளி 29 வீடுகள் சேதம்

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வீசிய மினி சூறாவளியில் 29 வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரங்கள், வீதியோரத்து மின்கம்பங்கள் என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மின் விநியோகமும் அந்தப் பிரதேசத்தில் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூறாவளியினால் எவரும் காயப்பட்டதாகவோ உயிரிழந்ததாகவோ தகவல் வெளியாகவில்லை. (ச-5)

# விடுதலைப் புலிகள் தோல்வியடைவதை இந்திய அரசு ஒருபோதும் விரும்பாது

## ஜே.வி.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியா ஒருபோதும் விடுதலைப் புலிகள் தோல்வியடைவதை விரும்பாது. இதனால் தோல்வியடையும் விடுதலைப் புலிகளை பாதுகாப்பதற்கான வியூகத்தை இந்தியா தற்போது முன்னெடுத்துள்ளது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி விரைவில் மீட்கப்படுமென அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடமிருந்து கிளிநொச்சிப் பிரதேசம் வெகு விரைவில் மீட்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபஷ்க அமைச்சர்களிடம் உறுதியளித்துள்ளதாக பிரபல சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவமும் விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்குகளை கைப்பற்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச படையினர் முன்னெடுக்கும் யுத்தத்திற்கு நிபந்தனையற்ற வகையில் நாட்டு மக்கள் அனைவரும் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி விளாங்குளத்தில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவில் வன்னி விளாங்குளம் மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப் படையின் கிபீர் ரக விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களால் வன்னி விளாங்குள மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அம்மக்களின் வீடுகள், வாழ்விடங்களை இலக்கு வைத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் மக்களின் பத்துக்கும் அதிகமான வீடுகள், பயன் தரு மரங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியன அழிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வன்னிப் பெரு நிலப்பரப்புக்குள் வைத்து இராணுவத்துக்கு பதிலடி கொடுப்போம்

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இராணுவத்தினருக்கு வன்னிப் பெரு நிலப்பரப்பை புதைகுழியாக மாற்ற அனைவரும் அணிதிரள்வோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

விமானப்படையின் குண்டுத்தாக்குதலில் செஞ்சோலை வளாகத்தில் படுகொலை செய்யப்பட்ட 53 மாணவிகளின் இரண்டாம் ஆண்டு வணக்க நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றியபோது பா.நடேசன் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 53 மாணவிகள் குண்டு வீச்சினால் பலியெடுக்கப்பட்டனர். இப்படுகொலை தமிழினத்துக்கு மட்டுமல்ல, பன்னாட்டு சமூகத்திற்கும் அரசாங்கத்தின் முகத்தை வெளிப்படுத்தி நின்றது.

சிங்கள (12ஆம் பக்கம் பார்க்க)



## மாணவர்களின் பேரணி மீது கண்ணீர்புகைக்குண்டுத் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பின் கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கும் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையை நோக்கி மகஜர் ஒன்றினை கையளிக்கும் நோக்கில் ஊர்வலமாகச் செல்ல முயன்ற நூற்றுக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களை தனியார் மயப்படுத்தக் கூடாது என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியினை நடத்தினர்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அருகில் நேற்று நண்பகல் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நுகேகொடை, கிருலப்பனை வழியாக கொள்ளுப்பிட்டி (12ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்கள் உக்கிரமடைந்துள்ளதால் நிவாரண விநியோகத்தில் சிக்கல்

### ஐ.சி.ஆர்.சி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வன்னியில் மோதல்கள் உக்கிரமடைந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கான நிவாரண மனிதாபிமான உதவிகளை விநியோகம் செய்வதில் மனிதநேயப் பணியாளர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (ஐ.சி.ஆர்.சி) தெரிவித்துள்ளது.

அதிகமான மக்கள் அடிப்படை மனிதாபிமான உதவிகளைப் பெற்றுள்ளபோதும் இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதால் மனிதாபிமான உதவிகளுக்கான தேவை மேலும் அதிகரித்துள்ளதாக ஐ.சி.ஆர்.சியின் இலங்கைக்கான பிரதித் தலைவர் அந்தனி டல்சியல் தெரிவித்தார்.

எனினும் வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நோயாளர் உரிமைகளை பாதுகாப்பதில் எழுச்சி பெற்றுள்ள மக்கள் இயக்கம்

**கொழும்பில் இயங்கி வரும் நோயாளர் உரிமைகளுக்கான மக்கள் இயக்கம் என்ற அமைப்பின் தேசிய இணைப்பாளர் வி.கந்தவேளுடன் நேர்காணல் ஒன்றை நடத்தினோம். அதன் விபரம் இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)**

# தேசிய இணைப்பாளர் கந்தவேளுடன் சந்திப்பு

மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வும் சிந்தனைகளும் வியாபகம் பெற்றுள்ள இன்றைய சூழமைவில் மனித உரிமைகளை பல்வேறு கூறுகளாக்கி அவை ஒவ்வொன்றிலுமான உரிமைத் தன்மையை காப்பாற்றுவதனூடாக மனித உரிமையை காத்திரமுடைய தாக்கும் முயற்சிகள் பல்முனைகளில் எழுச்சி பெற்றுள்ளன. அதில் ஒன்றாக நோயாளர் உரிமை பற்றிய சிந்தனை எழுச்சியை குறிப்பிட முடியும்.

நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தியலானது உயர்பெறுமானமுடையது. உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்காமலோ அன்றி உரியவாறு சிகிச்சை வழங்காமலோ ஒருவரின் உயிர் வாழும் உரிமை இழக்கப்படலாம்-மறுக்கப்படலாம் அல்லது அவர் அங்கவீனமுடையவராக மாறலாம். எனவே இந்நிலையில் நோயாளர் உரிமை என்ற விடயப் பொருள் மனித உரிமை பேணும் கருத்தியலின் உற்பத்திப் பகுதி எனலாம்.

அதாவது மனித உரிமை பேணுவதன் முதலாவது தொடக்கமே நோயாளர் உரிமை பேணுதல் என்ற மூலத்தில் இருந்து தொடங்கப்பட வேண்டும்.

இந்த உயரிய சிந்தனையுடன் நோயாளர் உரிமைகளுக்கான மக்கள் இயக்கம் (People's Movement for the Rights of Patients) PMRP தோற்றம் பெற்றுள்ளது. 2004 ஆம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது நோயாளர்களின் உரிமைகள் தொடர்பில் செயலாற்றி வருகின்றது.

'நோயாளர் உரிமை' என்பது அந்த அமைப்பின் மகுட வாசகமாக இருப்பினும் அதன் இலக்குகளும் தூர நோக்குகளும் பன்மைத்தன்மை வாய்ந்தவை.

❖ அதன் அடிப்படையில் உடல், உள, சமூக மேம்பாட்டை சுகாதாரப் பணியாளர்களின் வழிகாட்டலில் முன்னெடுத்தல்

❖ தொற்றுத் தன்மை, தொற்றாத் தன்மை நோயிலிருந்து விடுபட்டு வாழும் காலத்தை நீடிப்பதுடன் தரமான வாழ்வை ஏற்படுத்துதல் (இதில் தனிமனித கௌரவம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்) என்பன முதன்மைப் பணியாக அமைகின்றது.

**யாழ்ப்பாணத்தில்**

இந்த அமைப்பு யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு (2008) ஆரம்பிக்கப்பட்டுள்ளது அதன் இணைப்பாளராக நான் பணியாற்றி வருகின்றேன்.

தலைவராகப் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் பொறுப்பேற்றுள்ளார். மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் இந்த அமைப்பின் தொழிற்படு உறுப்பினர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்,

❖ மருந்துத் தட்டுப்பாடு

❖ முழுமைத் தன்மை வாய்ந்த ஆய்வு கூட வசதியின்மை

❖ துறை மருத்துவ சேவையாளர்களின் ப்றாக்குறை

என்பன நாம் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட மருத்துவ ரீதியிலான முதன்மைப் பிரச்சினையாகும்.

நோயாளர் உரிமையைக் காப்பதில் மேற்கூறப்பட்டபிரச்சினைகள் தடையாக அமைவதால் அது தொடர்பில் தீர்க்கமான முடிபுகளை நோயாளர் உரிமைகளுக்கான மக்கள் இயக்கம் (PMRP) முன்னெடுக்கவுள்ளது.

நோயாளர் உரிமை என்பது அவர் வாழும் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களின் கௌரவிப்புடன் பேணப்படவேண்டும் என்பதில் எமது அமைப்பு உறுதியாகவுள்ளது.

சமத்துவம், கௌரவம், மரியாதை என்பன நோயாளர்களின் உரிமையில் முக்கியம் பெறுகின்றன. நோயாளர்களின்உரிமை என்ற தொனிப் பொருள் எழுகைபெறும் போது அவை யாருடன் சம்பந்தப்பட்டது, யாரால் தீர்மானிக்கப்படுகின்றதென்னும் கேள்வி எழுகின்றது அங்குதான்,

I. மருத்துவர்
II. நோயாளி.

ஆகிய இருவர் தொடர்புபடுகின்றனர். நோயாளி ஒருவர் வைத்தியசாலைக்குச் செல்வதென்பது தனது நோயைக் குணப்படுத்தும் நோக்கிலாகும். எனவே 'நோய் குணப்படுத்தல்' என்பதிலிருந்து நோயாளர் உரிமை புத்துருவாகின்றது.

வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிக்கு அங்கு சுத்தமான-பாதுகாப்பான-சௌகரியமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். யாழ்.குடாநாட்டு மக்களை பொறுத்தவரை அவர்களின் முதன்மையான வைத்தியசாலையாக யாழ். போதனா வைத்தியசாலையே விளங்குகின்றது.

யாழ்.குடாநாட்டில் மாற்றுத் தெரிவுக்குச் சந்தர்ப்பமில்லாத ஒரே வைத்தியசாலையாக யாழ். போதனா வைத்தியசாலை இருப்பதால் அங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவேயுள்ளது.

அதிகரித்த நோயாளர்களின் மத்தியில் நோயாளர்களின் இரகசியத்தன்மை பேண முடியாத சூழலமைவு ஏற்படுகின்றது.

நோயாளி ஒருவர் தனது நோய்சார்ந்த அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட விடயத்தில் இரகசியம் காக்க முற்படுவாராயின் அதற்கான ஏற்பாடுகள் அவசியமாகின்றது. இது அவரின் அடிப்படைஉரிமையாகும் ஆனால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இரகசியம் பாதுகாத்தல் என்ற அடிப்படை உரிமையைக் கூடப் பாதுகாக்க முடியாமல் போகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

**மறுக்கும் உரிமை**

நோய்வாய்ப்பட்ட ஒருவர் சிகிச்சை பெற்றுக் கொள்வது எத்துணை உரிமையுடையதோ அதுபோன்று சிகிச்சையை மறுக்கும் உரிமையும் நோயாளிக்குண்டு என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

உதாரணமாக சத்திர சிகிச்சையை நிராகரிக்கும் உரிமை நோயாளிக்குண்டு. அதே நேரம் சிகிச்சை ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்போது அதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை-பின் விளைவுகளை அறிந்து கொள்வதற்கான உரிமையும் நோயாளிக்கு உண்டு என்பதை மருத்துவத்துறையினர் நினைவிற் பதித்துக் கொள்வது அவசியமாக அமைகின்றது.


நோயாளி ஒருவர் குணமடைவதென்பதன் வேகம் தகுந்த சிகிச்சையைப் பெறுவதென்பதில் இரு வேறு கருத்துக்கிடமில்லை. எனினும் தகுந்த சிகிச்சையைப் பெறுதல்-தனக்கு ஏற்பட்டுள்ள நோயின் தாக்கங்களை அறிந்து கொள்ளுதல், நோய்க் காலத்திலும், சிகிச்சைக் காலத்திலும் அதன் பின்னரும் உடற் பராமரிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அறிந்து கொள்வதென்பதும் தனக்கு இருக்கக் கூடிய உரிமை என்பதை ஒவ்வொரு நோயாளியும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் தகுந்த சிகிச்சையும், உகந்த பராமரிப்பும், தக்க சூழலும் சாத்தியமாகும் என்பதை மனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையுடையோர் மறுக்க மாட்டார்கள். இது நிறுத்திட்டமான உண்மை.

**சங்கத்தின் பணிகள்**

(i) நோயாளிக்கு இருக்கும் உரிமைகளை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மூலம் வெளிப்படுத்தல்.

(ii) மருந்துத்தட்டுப்பாடுகள் ஏற்படும்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சிபார்சுக்கமைய உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளின் கீழ் தாய்ச் சங்கம் மருந்துகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும். அத்தகைய நடவடிக்கைகள் மூலம்



தட்டுப்பாடான மருந்துகளை சங்கம் அனுப்பி வைத்துள்ளதுடன் தொடர்ந்தும் அதனை அமுல்படுத்தும்.

(iii) யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு செல்லும் நோயாளர்கள் மொழிப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். இதனால் நோயின் தன்மையை எடுத்துக் கூறுவதிலும்-அதனைப் புரிந்து கொள்வதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

தமிழ் பேசத் தெரிந்த மருத்துவர்களைக் கடமையில் ஈடுபடுத்தாமையே இதற்கான காரணமாகும். இது விடயத்தில் தமிழ் தெரிந்த மருந்துவர்களை மேலதிகமாக நியமிப்பதில் எமது தாய்ச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(iv) மருத்துவத் துறையில் துறை சார்ந்தவர்கள் சிலர் இலாப நோக்கில் செய்து கொள்ளும் துஷ்பிரயோகங்கள், ஆங்கில மருத்துவம் சாராதவர்கள் ஆங்கில மருந்துகளைச் சிகிச்சைக்காகப் பயன்படுத்துதல், தாமாகவே மருந்துகளை வேண்டி உட்கொள்ளுதல், அதற்கு மருந்து விற்பனை நிலையங்கள் உடன் போதல் என்ற விடயங்களும் சங்கத்தினால் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**சந்திப்பு**
**ஆதித்தன்**

**சட்ட நடவடிக்கைக்கு உதவி**

மருத்துவ சிகிச்சையின்போது சிகிச்சையில் ஏற்பட்ட தவறினால் ஒருவர் பாதிக்கப்படுவாராயின் சம்பந்தப்பட்டவர் அது தொடர்பில் தனக்கு நிவாரணம் தேடிக் கொள்ளும் வகையில் நீதிமன்றத்தை நாட முடியும்.

அவ்வாறு நீதிமன்றத்தை நாடும்போது எமது சங்கம் அவர்களுக்கு வேண்டிய சட்ட உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது. அதேநேரம் சம்பந்தப்பட்ட நபருக்கு தவறான சிகிச்சை மூலம் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்திக்க மேலதிக சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளையும் எமது சங்கம் வழங்கி வருகின்றது.

ஒட்டு மொத்தத்தில் இச் சங்கத்தின் பணி. நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து மானிடத்தின் பெறுமானத்தை வலுப்படுத்துவதாகும். *

இன்று மஞ்சத்தில் எழுந்தருளும் நல்லூர்க் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக!

கணேசன் சென்ரர்

கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

அனைத்து வகையான ஆடைகளையும் பான்சி பொருட்களையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

T.P. :- 021 222 5708

(C-1408)

நல்லூர் முருகப் பெருமானின் மஞ்சத் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

குறைந்த விலைகளில் கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

PC Park (PVT) LTD

633, K.K.S. Road, Jaffna.
T.P. 021 222 9581
Fax:- 021 222 9581

(C-1407)

# இன்று ஒரு தகவல்

## அந்த ஐந்துபேர்!

'இவர் மாதிரி இந்த உலகத்தில் வேறு எவரும் இருக்க முடியாது. இவர் கோடியில் ஒருவர்' என்று சில பேரை அறிமுகப்படுத்துவது உண்டு.

இந்த உலகத்தில் அபூர்வமான அருமையிலும் அருமையானவர்கள் ஐந்துபேர் உண்டு என்கிறார் 'கிருபானந்தவாரியார். யார் அந்த ஐந்து பேர்?

தனது பொருளின் கெடுதியையும் கூறும் வியாபாரி! புகழை விரும்பாத கொடையாளி! மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்கும் வணிகர்.

எந்தவித லஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர்.

தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் குற்றவாளி!

இந்த ஐந்து பேரும்தான் அருமையிலும் அருமையானவர்கள்.

தன்னுடைய பொருளின் கெடுதியைக்கூறும் வியாபாரி யாராவது உண்டா?

உளுத்தம் பருப்பு ஒரு கிலோ கொடுங்க-என்று கேட்கிறீர்கள். 'வேண்டாம் சார்... எங்கள் கடையில் இருக்கும் உளுத்தம்பருப்பு நல்லதல்ல! எதிரில் ஒருவன் கடைவைத்திருக்கிறான். அந்த கடையில் இருப்பது நல்ல தரமானது! அங்கேபோய் வாங்கிக்கொள்ளுங்கள்!' என்று யாராவது சொல்வார்களா? சொன்னால் 'அந்த ஆளுக்குப் புத்தி மாறிவிட்டது போல' என்று தான் நினைப்போம்!

அதேமாதிரி தான் புகழை விரும்பாத கொடையாளி! இந்தக் காலத்தில் கொடையாளி ஆவதே புகழுக்காகத் தான்!.

இடதுகை கொடுக்கிறது வலது கைக்குத் தெரியக் கூடாது என்பார்கள். ஆனால் இன்றைக்கு எதைக் கொடுத்தாலும் இரண்டு கைகளாலும் சேர்த்துக் கொடுத்துத் தான் போட்டோ பிடிக்கிறோம். இடது கை வாங்கிறது வலதுகைக்குத் தெரியக்கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம் அது இந்தக் காலத்துக்குப் பொருத்தமாக இருக்கும்!

மூன்றாவது அபூர்வமான ஆள்... மாற்றைக் குறைத்து சொல்லாமல் பொன் வாங்குபவர். கூட்டிச் சொல்லி வாங்கினால் அவரின் நிலைமை என்ன அகிறது?

அடுத்ததாக உள்ள அபூர்வமானவர் எந்தவித லஞ்சமும் வாங்காத உத்தியோகஸ்தர்.

உத்தியோகஸ்தர் என்றால் அதற்கு விளக்கம் என்ன தெரியுமா?

லஞ்சம் வாங்குவதற்குப் பல உத்திகளைத் தெரிந்து வைத்திருக்கிறவர்... அதனால் அவர் யோகஸ்தர்! அது தான் உத்தி-யோகஸ்தர்!

இன்றைக்கு உலகத்தில் லஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்துவிடலாம். ஆனால் லஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ளமுடியாதுபோல் இருக்கிறது!

லஞ்சம் கொடுப்பதென்றாலும் வாங்குவதென்றாலும் சரி அதற்கு இந்தக்காலத்தில் சிபாரிசு வேண்டியிருக்கிறது. அருமையிலும் அருமையானவர்களில் ஐந்தாவது ஆள் தண்டனையை நியாயம் என்று ஒப்புக் கொள்ளும் குற்றவாளி!

எனக்கு கோர்ட்டில் பத்துவருட கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்பாகிவிட்டது. அது நியாயமான தண்டனைதான்! அந்த தண்டனையைக் கொடுத்த நீதிபதி எனக்குத் தெய்வம் மாதிரி! என்றா சொல்லிக்கொண்டிருப்பான் அந்தக் குற்றவாளி.

இப்படியான ஆட்களைப் பார்ப்பது மிக்க் கஷ்டம் அப்படி யாராவது கண்ணில் பட்டால் அவர்கள் அருமையிலும் அருமையானவர்கள் தான்! ஒருவர் நல்ல கௌரவமான உத்தியோகத்தில் இருந்துகொண்டு லஞ்சம் வங்கினார்.

'ஏன் சார்... இவ்வளவு கௌரவமான உத்தியோ கத்தில் இருந்து கெண்டு லஞ்சம் வாங்குகிறீர் களே... இது தவறு இல்லையா?' என்று கேட்டேன் அவரிடம்!

'இதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால் இந்தக் கௌரவமான உத்தியோகத்ததையே நான் லஞ்சம் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறேன்!' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## வரலக்சுமி பூசை

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் வரலக்சுமி பூசை இன்று மு.ப.11 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து திருவிளக்குப்பூசை, வரலக்சுமி காப்பு கட்டுதல் என்பன இடம்பெறும்.

ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீமன் நாராயணர் உள்வீதி வலம்வரும் திருக்கோலக்காட்சி இடம்பெறும் (அ-36)

## 17ஆம் திகதி சந்திர கிரகணம்

(சென்னை)

சந்திர கிரகணத்தை அதி காலை 1.10 மணி முதல் 4.15மணி வரை வெறும் கண்களால் பார்க்க முடியும் என தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் தெரிவித்துள்ளது.

சந்திர கிரகணம் என்பது சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரே நேர்கோட்டிற்கு வரும்போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது. பூமியின் கருநிழல் சந்திரனை கடக்கும் போது அதனுடைய ஒளிக்கற்றை குறைந்து காணப்படும். முழுமையாக மறையாது 80சதவீதம் வரை மறைக்கும் எனவே. இது பகுதி சந்திர கிரகணம்.

17ஆம் திகதி நிகழும் பகுதி சந்திர கிரகணம் இந்தியா, ஆசிய நாடுகள், ஐரோப்பியா, ஆபிரிக்கா, தென் ஆபிரிக்கா, அந்தாட்டிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தெரியும். (ச)

## பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

சாவகச்சேரி லயன்ஸ் கழக தையல், கேக் ஐசிங், தலை அலங்கார வகுப்புக்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30க்கு கழகத் தலைவர் வீ.மகா லிங்கம் தலைமையில் கழக காரியாலயத்தில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

சர்வதேச லயன்ஸ்கழக 306பி1 மாவட்ட முன்னாள் ஆளுநர் லயன் செ.இராகவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சி நெறியினை ஆரம்பித்துவைக் கவுள்ளதாக செயலாளர்லயன்செ.கா.நவரத்தினம் தெரிவித்துள்ளார். (அ-29)

## இராசி பலன்

*15.08.2008*
*(ஆடி 31, வெள்ளிக்கிழமை)*
*உத்தராடம் பிற்பகல் 1.21 மணிவரை*
*சதுர்த்தசி பின்னிரவு 2.43 மணிவரை*
*இராகுகாலம்-10.35-12.05 மணிவரை*
*சுபநேரம்-6.05-7.35 மணிவரை*
*வரலக்ஷ்மி விரதம்,*
*பட்டினத்தடிகள் குருபூசை*
*நல்லூர் கந்தசுவாமி மஞ்சம்*

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, காரிய நன்மை, சுபநிகழ்வு, தூரதேசச் செய்தி. |
| இடபம் | ஆன்றோர்மதிப்பு,உடல்உழைப்பு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல். |
| மிதுனம் | ஆரோக்கியக்குறைவு, வீண்பகை, முயற்சி தடங்கல், போசன சுகம். |
| கடகம் | தெய்வதரிசனம், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், காரிய அனுகூலம். |
| சிங்கம் | சுகவாழ்வு, திடீர் பயணம், பண வருவாய், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், குடும்பக்கவலை, வீண்செலவு. |
| துலாம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை, காரியதாமதம். |
| விருச்சிகம் | வாக்குமேன்மை, அன்னியர் சந்திப்பு, பொருள்சேர்க்கை. |
| தனுசு | பணக்குறைவு, தொழில் மந்த நிலை, மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர் சந்திப்பு, தெய்வதரிசனம். |
| கும்பம் | பிதாசிந்தை, கோபப்படுதல், பணவிரயம், திடீர் பயணம். |
| மீனம் | தெய்வதரிசனம், தொழில் நன்மை,மனமகிழ்ச்சி. |

வளவன்

# மடு யாத்திரிகர்கள் தங்கியிருந்து வழிபாடு செய்ய வசதி இல்லை

## குரு முதல்வர் விக்டர் சூசை அறிவிப்பு

(கொழும்பு)

இம் முறை மருதமடு திருத்தலத்திற்கு யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கு தங்கியிருந்து வழிபாடுகளை மேற் கொள்ள வாய்ப்பளிக்கப்பட மாட்டாதென குரு முதல்வர் விக்டர் சூசை தெரிவித்துள்ளார்.

யாத்திரை முகா மிற்கு வருகை தரும் அதே தினத்தில் முகாமை விட்டு வெளியேற வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாத்திரை முகாம்களில் நீர் மற்றும் மின்சார வசதிகள் மாத்திரமே இம் முறை செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங் களைப் போன்று ஹோட்டல் வசதிகள் எதுவும் இம்முறை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மடுத் திருத்தலத்திற்கு யாத்திரை மேற்கொள்வோருக்கு வனாந்தரப் பகுதிகளுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குரு முதல்வர் தெரிவித்துள்ளார். (அ-5)


# புத்தளத்தில் இருந்து மன்னாருக்கு கடற்பிரதேசத்தின் ஊடாக புதிய வீதி

## பெருந்தெருக்கள் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

புத்தளம் கடற்பிரதேசத் தினூடாக மன்னாருக்குச் செல்லும் புதிய வீதி யொன்றை அமைக்க பெருந் தெருக்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்காலத்தில் இதன் மூலம் பக்தர்கள் மடு தேவாலயத்துக்கு இலகு வாகச் சென்றுவர வழியேற்படும் என்றும் பெருந் தெருக்கள் பதில் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தளம்-மன்னார் புதிய வீதி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன. பாதெனிய பிரதேசத்தில் இருந்து புத்தளம் வரையிலான 110 கிலோ மீற்றர் நீளமான பாதைக்கு காபட் தாரிடும் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. இந்த வீதியில் பெரிய பாலம் ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை பெருந்தெருக்கள் அமைச்சு ஒதுக்கியுள்ளது. கடற்படையினரின் ஒத்துழைப்பும் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்றும் கூறினார். (அ)



புலமையாளர் அல்வாயூர் கவிஞர் மு.செல்லையாவின் ஜனன நூற்றாண்டை ஒட்டி, ஞானம் சஞ்சிகைக் கூடான சிறுகதைப் போட்டியில் வெற்றியாளர்களுக்கான பரிசளிப்புவிழா கடந்த 27ஆம் திகதி அல்வாய் சாமணந்துறை ஆலடிப்பிள்ளையார் கோவில் கவிஞர் செல்லையா அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் வரவேற்புரையினை மா.அனந்தராசன் நிகழ்த்து வதையும், தலைவர் செ.சதானந்தன் J.P. (ஓய்வுபெற்ற அதிபர்), சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் (அதிபர் குடத்தனை அ.மி.த.க.வித்தி), P.கிருஷ்ணானந்தன்(முகாமையாளர் மக்கள் வங்கி V.V.T) பிரதம விருந்தினர் பேராசிரியர் கலாநிதி செ.சிவலிங்கராசா (யாழ்.பல்கலைக்கழகம், தமிழ்த்துறை), மூத்த எழுத்தாளர் கலாபூசணம் தெணியான், கலாநிதி த.கலாமணி (சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியற்துறை யாழ். பல்கலைக்கழகம்) மூன்றாவது பரிசைப் பெற்றுக்கொண்ட இ.இராஜேஸ் கண்ணன் ஆசிரியர், சிறப்புப் பரிசில் பெற்றுக்கொண்ட V.அகிலன் ஆசிரியர் ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதையும் படத்தில் காணலாம்.

# மாவட்ட செயலாளர்களுக்கு நெல் கொள்வனவு செய்யும் அதிகாரம்

விவசாயிகளிடமிருந்து நெல்லை நேரடியாகக் கொள்வனவு செய்யும் அதிகாரம் மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அலரி மாளிகையில் நடைபெற்ற உணவுப் பாது காப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுக் கூட்டத்தின்போது ஜனாதிபதி இத்திட்டத்தினை அறிவித்தார்.

இது தொடர்பான சுற்று நிருபத்தை மாவட்டச்செயலாளர்களுக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

விவசாயிகளுக்கு நெல்லுக்கான உத்தரவாத விலையைப் பெற்றுக்கொடுத்தல். சந்தையில் அரிசி விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் சந்தைக்கு தடையின்றி அரிசி விநியோகிக்கும் களஞ்சிய கையிருப்பை பேணுதல் ஆகிய நோக்கங்களுக்காக இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

நெல்லைக் கொள்வனவு செய்யும்போது விவசாயிகளை விவசாய சங்கங்களுடன்நேரடியாகதொடர்பை ஏற்படுத்தும் பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர் இதனை மேற்பார்வை செய்ய வேண்டும். இதற்கான நிதியை மாவட்டச் செயலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறு திறைசேரியின் செயலாளருக்கும் விவசாய அமைச்சின் செயலாளருக்கும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (அ-5)

## திறந்த பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்

பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களுக்கான இரண்டாம் கல்வித் தவணைக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறும்.

அனைத்து மாணவர்களையும் யாழ். பிராந்திய நிலையத்திற்கு சமூகம் தருமாறு இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## பயிற்சிநெறி

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக் களங்களில் கடமை புரியும் மத்திய, மாகாண அமைச்சுக்களைச் சேர்ந்த தற்காலிக, அமைய, பதிலீட்டு அடிப்படை, ஒப்பந்த அடிப் படையில் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும் பொருட்டு இது வரை விபரங்களை அனுப்பி வைக்காத அரச திணைக்களங்களைச் சேர்ந்த அலுவலர்கள், திணைக்களத் தலைவர் ஊடாக 18 ஆம் திகதிக்கு முன் மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர்(த.பீ) உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.செயலக தலைமைப்பீட, உதவி அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொலைபேசி இல:021222 2771. (அ)

## படைப்பிலக்கியக் காட்சிக்கூடம்

அகில இலங்கை கலை இலக்கிய சங்கமானது எழுத்தாளர்கள், கவிஞர்களினால் படைக்கப்பட்ட நூல்களினை பாதுகாக்கும் பொருட்டும், அதனைக் காட்சிப்படுத்தும் பொருட்டும் படைப்பிலக்கியக் காட்சிக்கூடமொன்றினை அமைக்கவுள்ளது.

ஆதலால் படைப்பாளிகள் தாங்கள் வெளியிட்ட நூலின் பிரதி ஒன்றினையும் தங்களின் விபரங்களையும் அனுப்பி வைத்தால் கால ஒழுங்கின் படி காட்சிப்படுத்த ஏதுவாக அமையும் என்பதோடு ஆய்வு செய்கின்றவர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் பெரும் வரப் பிரசாதமாகவும் அமையும். ஆதலால் படைப் பாளிகள் தங்களின் நூலினை 'படைப் பிலக்கியக் காட்சிக் கூடம்' அகில இலங்கை கலை இலக்கியச் சங்கம் கொமர்ஷல் வங்கி முன்பாக,நெல்லியடி கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக் குமாறு சங்கத் தலைவர் 'சொல்வேந்தர்' பொன். சுகந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## முன்பள்ளிகளுக்கு சத்துணவு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள முன்பள்ளிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்கை சேர்ந்த 5 முன்பள்ளி 125 மாணவர்களுக்கு வைகாசி மாதம் தொடக்கம் சத்துணவுகளாக கடலை, பயறு, கௌபி, ஜீவாகார உணவு 60 கிலோ மாதாந்தம் வழங்கப்பட்டு வருகிறது. (அ-35)

## விண்ணேற்பு விழா

(ஊர்காவற்றுறை)

யாழ். குடாநாட்டிலுள்ளஅனைத்து தூய மரியாள் ஆலயங்களிலும் அன்னை மரியாளின் விண்ணேற்பு விழா கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை மாலை4மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை திருவிழாத்திருப்பலியும் திருச் சொரூப்பவனி, ஆசீர் ஆகியன நடைபெற்று திருவிழா நிறைவு பெறுகின்றது. (அ-72)

# விளையாட்டின் மூலம் நல்லொழுக்கம் உள்ள சமூகத்தை உருவாக்கவேண்டும்

## யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் விமலேந்திரன் உரை

(வட்டுக்கோட்டை)

விளையாட்டின் மூலம் நல்லொழுக்கம் உள்ள திடகாத்திரமான சமூகத்தை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும் என கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதிப்போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது எங்கள் கடமை. ஆனால் அதனை சரிவரப் பயன்படுத்திக் கொள்வது மாணவர்களின் பொறுப்பு என்றார்.

எமது மாணவர்கள் அகில இலங்கை ரீதியான போட்டிகளில் பங்குபற்றி பல சிறந்த இடங்களைப் பெறவேண்டும்.அதற்கு மாணவரின் திறன் அறிந்து அவர்களுக்கேற்ற தேவையான பயிற்சிகளையும் ஒழுக்கத்தையும் பேணும்போது வீரன் அல்லது வீராங்கனை நாடளாவிய ரீதியில் சிறந்த விளையாட்டு வீரர்களாக மாறுகின்றார்கள்.

ஆதலால் ஓர் புதிய நல்லொழுக்கம் உள்ள திடகாத்திரமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு ஆசிரியர்கள்,அதிபர்கள் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அகில இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கம், யாழ்ப்பாணக் கல்லூரியின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்.மாவட்டப் பாடசாலை களுக்கிடையிலான 17 வயதிற்குட்பட்ட ஆண்கள் கூடைப் பந்தாட்டப் போட்டிகளை, யாழ்ப் பாணப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் கடந்த 7,8ஆம் திகதிகளில் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடத் தப்பட்டது. இப்போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி 40:31 என்ற புள்ளிகள் பெற்று சென்ஜோன்ஸ் கல்லூரியை வென்று சம்பிய னாகத் தெரிவு செய்யப்பட்டது. மூன்றாம் இடத்தை யாழ். இந்துக்கல்லூரி பெற்றுக் கொண்டது.

இப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு அகில இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை யாழ்.கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவரும், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான என்.ஏ.விமலேந்திரன் வழங்கிக் கௌரவித்தார். (ஓ-27)

## பற்றீசியன்ஸ் அணி 9 விக்கெற்றுக்களால் வென்று வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது

கடந்த 10 ஆம்திகதி சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வீ.டி. ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணி, ஜொலிஸ்ரார் அணியை 9 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்று ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்தை இரண்டாவது ஆண்டாகத் தன்வசமாக்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 37.2 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 111 ஓட்டங்களை பெற்றனர். ஜனார்த்தனன் 17, ரி.கோசிகன் 20, என்.பகிரதன் 25, பற்றீசியன்ஸ் அணியைச் சேர்ந்த ஜி.றஞ்சித் 15 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெற்றுக்களையும், பி.பத்மமுரளி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும், எம்.எ.நிவோஸன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 26 ஓவர்களில் 1 விக்கெற் இழப்பிற்கு 117 ஓட்டங்களை பெற்றனர். ஜெயந்திரன் 47,ஜெயமுகுந்தன் ஆட்ட மிழக் காது 51.

இப்போட்டியில் வெற்றிபெற்ற பற்றீசியன்ஸ் அணிக்கு ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் 2ஆம் இடத்தை (RUNNER-UP) பெற்ற ஜொலிஸ்ரார் அணிக்கு ஜெயா கனகநாயகம் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும், போட்டியின் ஆட்டநாயகன் பி.பத்மமுரளிக்கு (MAN OF THE MATCH) சிவமித்திரன் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும், இச் சுற்றுப் போட்டியின் தொடர் நாயகன் அ.சேர்ச்சிலுக்கு (MAN OF THE SERIES) மணிவதனன் வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங் கப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவனும், வடமாகாண இலங்கை வங்கி உதவி பொது முகாமையாளருமான B.A.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (அ)




## உள்ளூராட்சிவார போட்டி முடிவுகள்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தையொட்டி அதன் பிரதேச எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்தப்பெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்களை வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் அராலி ஐக்கிய சனசமூக நிலையத்தைச் சேர்ந்த கி. கஜேந்திரன், கி.கஜோதரன், பூ.சயந்தன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

7ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இ. ஸ்டாலின், இ.ரசீம், திருநாவுக்கரசு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த நா.டினோபன் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

9 ஆம் திகதி சனிக்கிழமைநடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அராலி அம்பாள் சனசமூக நிலையம் முதலாம் இடத்தையும் அராலி திருவள்ளுவர் சனசமூக நிலையம் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (ஓ)

## வருடாந்த விளையாட்டு விழா

எவர்சைன் சிறுவர் உலகத்தின் 3ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் எவர் சைன் கல்வி நிறுவன இயக்குநர் திருமதி ச.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ச.சுபாஸ்சந்திரன், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.சிறிகுமார், கௌரவ விருந்தினர்களாக ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் நல்லூர்க் கோட்ட இணைப்பாளர் திருமதி மா. விவேகானந்தன், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.நிமலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டி நடத்தும் தெய்வீக இசையரங்கு, நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மாலை 5.30 மணிமுதல் 6.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் மஞ்சத் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் ஆசியுரையுடன் கலாபூஷணம் கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (ஓ)

## வருடாந்த மஹோற்சவம்

ஆவரங்கால் கிழக்கு திருவருள் மிகு புதுவை ஆலடி முருகன் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.


23ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 10 மணிக்கு இரதோற்சவமும், 24 ஆம் திகதி காலை 7மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். ஏனைய நாட்களில் தினமும் காலை 8 மணிக்கும் மாலை 5மணிக்கும் திருவிழா ஆரம்பமாகும். அத்துடன் தினமும் யாழ்.சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினரால் 10தினங்களும் ஆன்மீக சொற்பொழிவுகள் நடாத்தப்படஉள்ளது. இதில் இன்றும் நாளையும் 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவனின் சந்நிதி', 'உனக்கும் நீயே விளக்கு' எனும் தலையங்கங்களில் யோக கேந்திரா நிலையத் தலைவர் நா. நவராஜ் சொற்பொழிவாற்ற உள்ளார். (ஓ)

## சிறப்புச் சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் சிறப்புச்சொற்பொழிவு மற்றும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளில் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு 'உனக்கு நீயே விளக்கு' எனும் பொருளில் சிவலிங்கயோக கேந்திரா நிலையத் தலைவர் சைவப்புலவர் நா.நவராஜ் சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, அரியாலை சித்தி விநாயகர் அறநெறிப பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (அ)







இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வலிகாமம் பிரதேசத்தில் ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட சுந்தரர் குருபூசையின் போது தலைவர் த.பிரதீஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா குறுவினாப் போட்டியில் வெற்றியீட்டிய அறநெறிப் பாடசாலை மாணவிக்கு பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும் மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சி.கிசோத்)

# நோத்முதல் கோபல்லவா வரை 68

## இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

சட்டசபையில் அமளி துமளிகள் ஓரளவுக்கு ஓய்ந்த பின்னர் ஆள்பதி சேர் யோச் றொபின்சன் அவர்கள் பொறுப்பேற்க வந்தார்கள். அவர் திறமைவாய்ந்த உத்தியோகத்தர் எனப் பெயர் பெற்றவர். நல்ல அனுபவசாலி. அவரை ஆள்பதியாகப் பெற்ற இலங்கை பாராட்டப்பட வேண்டியது என ஓர் ஆங்கிலேயர் அக்காலத்தில் எழுதினார்.

றொபின்சன் அவர்கள் 1865ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வந்து 1872ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் பரிபாலனஞ் செய்தார், அக்காலத்தில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டன. அதற்கு முன் பவுண், சிலிங், பென்ஸ் என்ற ஆங்கில நாணயங்களே வழக்கில் இருந்தன. அவர் காலத்திலே தான் ரூபா சதம் வழக்கத்தில் வந்தன. பிற்காலத்தில் ஏழாம் எட்வேட் எனப் பிரித்தானிய பேரரசை ஆண்ட சக்கரவர்த்தி விக்டோரியா மகாராணியின் மைந்தர். 1870 இல் வேல்ஸ் இளவரசராக இருந்த காலத்தில் இலங்கைக்கு வருகை புரிந்து சிறப்புச் செய்தார்.

ஆள்பதி றொபின்சன் அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு மாற்றம் பெற்றுச் சென்ற பின் சேர் வில்லியம் கிரகரி என்பார் ஆள்பதியாக வந்தார். அவர் இலங்கையை ஆண்ட ஆள்பதிகளுள் திறமை மிக்கவருள் ஒருவர் எனப் போற்றப்படுபவர். அவர் இளமையிலே அதிக விவேகம் உள்ளவராய்ப் பாராளுமன்ற அங்கத்தவராயும் இருந்து அனுபவம் பெற்றவர். அவர் இளைஞராயிருந்த காலத்திலேயே அவருக்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தை முதன் மந்திரியார் வழங்கிய போதிலும் அவர் அதனை ஏற்க மறுத்து விட்டார் என்பது சரித்திரம்.


**மீள் பார்வை**

கிரகரி அவர்களுக்கு இலங்கையில் வசிப்பதற்கு விருப்பம் இருந்தமையால் அவர் நுவரேலியாவில் ஒரு பெரிய வீட்டை விலையாக வாங்கியிருந்தார். இலங்கையைச் சுற்றிப் பார்த்துத் தமக்குத் தேவையான தகவல்களை அறிந்து கொண்டார். அவர் காடுகளுக்கூடாகவும், மறைந்த பழைய தலை நகரங்களுக்கூடாகவும் பிரயாணம் செய்து பரிபாலன அலுவல்களில் மாற்றங்கள் செய்வதற்குத் தேவையான முன்னறிவைப் பெற்றார்.



காலித்துறைமுகம்:- கொழும்புத்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்பு காலித் துறைமுகமே நாட்டின் பிரதான துறைமுகமாகக் காணப்பட்டது. [illegible] மொரிசியஸ் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சமதூரத்தில் அமைந்துள்ளமையால் பிரித்தானிய கப்பல்கள் [illegible] துறைமுகமாக [illegible] கடினமாக இருந்தது. (BRITISH LIBRARY-1872)

இதுகாறும் வடமாகாண பிரிவிலேயே அநுராதபுரமும் சேர்க்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணக் கச்சேரியிலிருந்து நெடுந்தூரத்துக் கப்பாலுள்ள அநுராதபுரத்தைப் பரிபாலிப்பது அரசாங்கத்துக்குச் சிரமமாயிருந்தது. எனவே அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட வடமத்திய மாகாணத்தைப் பிரித்தார்கள். அங்கே பிரபரிக்டிக்சன் என்ற வெள்ளையரை அரசாங்க அதிபராக நியமித்து நீர்ப்பாசன வேலைகளைக் கவனிக்க வழி வகுத்துப் பல குளங்களைப் புனருத்தாரணஞ் செய்தார்கள். காலவேவா ஓர் உள்ளூர் கடல் போன்ற தாய் முப்பத்தைந்து மைல் சுற்றளவுள்ள தாய் ஊர் மக்களுக்குப் போதிய நீரளிப்பதாய் இருந்தது. ஆள்பதி கிரகரி அவர்களின் முயற்சியால் காலவேவாவிலிருந்து உள்ளூர்களுக்கு வெட்டப்பட்ட பழைய வாய்க்கால்கள் பழுது பார்க்கப்பட்டன.



கிரகரி அவர்கள் மாகாண அதிபர்களை ஆண்டுதோறும் ஒருங்கே அழைத்து மாநாடு நடத்தி அவர்கள் அவையிலே பொது மக்களுக்கு வேண்டிய வலுவல்களைப் பற்றியும் அவற்றின் செலவு விபரங்களைப் பற்றியும் பேசி வந்தார். குளங்களையும் வாய்க்கால்களையுந் திருத்தி விவசாயத்துக்கும் வழிவகுத்தமையோடு நில்லாது வீதிகளை அமைத்து போக்குவரத்துத் துறையிலும் அபிவிருத்தி வேலைகளைச் செய்வித்தார். அவர் காலத்திலேயே கொழும்புத் துறைமுக அணைகட்ட ஆரம்பிக்கப்பட்டது.

கிரகரி அவர்கள் காலத்திலேயே மின்னேரியாக் குளம் புதுப்பிக்கப்பட்டது.

**க.சி.குலரத்தினம்**

(தொடரும்)




தென்மராட்சி கொடிகாமம் பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினால் தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றியத் தலைவர் எஸ்.கே.கதிர்காமம் உரையாற்றுவதையும், பொருளாளர் இ.ஜெ.ஜெயரட்ணம் அடிகளார், செயலாளர் வி.பத்மதயாளன், சாவ.தென்னிந்திய திருச்சபை அருட்தந்தை வண ரி.எச்.வசந்தகுமார் ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதை முதலாவது படத்திலும், முன்பள்ளி ஆசிரியர் ஒருவருக்கு ஒன்றியப் பொருளாளர் தளபாடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய வலுவிழந்தோர் தினத்தை (யூலை 24) முன்னிட்டு யாழ்.சத்திய சாயி நிலையத்தில் 138 வலுவிழந்தோர்களுக்கான அன்பளிப்புகளும் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்ட போது...

# கோப்பாய்ப் பிரதேசத்தின் இன்றைய கல்விநிலை 4



இத்தரவுகளிலிருந்து, 11 பாடசாலைகளின் சித்திவீதம் (க.பொ.த. உயர்தரத்துக்குத் தகுதி பெற்றோர் வீதம்) 2006 ஆம் ஆண்டைவிட 2007 இல் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால், இவற்றுள் கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பெறுபேறு (5.88%) மிகவும் தாழ் நிலையிலேயே உள்ளது.

அதேவேளை, வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பெறுபேற்றில் ஒரு பாய்ச்சல் ஏற்பட்டிருப்பது கவனத்திற்குரியது (75%). உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெறுபேறும் தாழ்வாகவே உள்ளது (13.33%).

2006 ஆம் ஆண்டைவிட 2007 இல் சித்திவீதம் குறைந்திருக்கும் பாடசாலைகள் ஆறினுள் இடைக்காடு மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய மூன்றும் IAB வகைப் பாடசாலைகளாகும்.

ஏனையவற்றுள் ஒன்றான அச்சுவேலி மகாவித்தியாலயம் IC வகைப்பாடசாலையாகும். எஞ்சியுள்ள புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம் ஆகியன வகை II பாடசாலைகளாகும்.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் நான்கு IAB வகைப் பாடசாலைகளும் மூன்று IC வகைப்பாடசாலைகளும் மாத்திரமே உள்ளன. ஆயினும், இப் பாடசாலைகளில் 2007 இல் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 40% இற்குக் குறைந்தோரே உயர்தர வகுப்பில் கற்பதற்கான தகுதி பெற்றிருப்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இப் பாடசாலைகள் க.பொ.த.உயர்தர வகுப்புக்களைக் கொண்டிருப்பதனால், உயர்தர வகுப்புகளுக்கு அனுமதித் தகுதி பெறும் குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டே அவ் வகுப்பு களை நடத்த வேண்டியிருக்கும்.

பொதுவாக இப் பாடசாலைகளின் பெறுபேறுகள் 2007 இல் மாத்திரமன்றி கடந்த ஐந்து வருடங்களிலும் கூட, தாழ்வாகவே உள்ளன. குறிப்பாக, IAB வகைப் பாடசாலையான உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பெறுபேறுகள் ஏனையவற்றோடு ஒப்பிடும்போது, கடந்த ஐந்து வருடங்களிலும் தாழ்வாகவே இருப்பது இங்கு கவனத்தைப் பெறுகிறது.

**அட்டவணை 5 க.பொ.த(சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறுகள் 2003-2007**

| பாடசாலையின் பெயர் | 2003 தோ. எ | 2003 த.பெ.எ | 2003 த.பெ. நூ.வீ | 2004 தோ. எ | 2004 த.பெ.எ | 2004 த.பெ. % | 2005 தோ. எ | 2005 த.பெ.எ | 2005 த.பெ. % | 2006 தோ. எ | 2006 த.பெ.எ | 2006 த.பெ. % | 2007 தோ. எ | 2007 த.பெ.எ | 2007 த.பெ. % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சுவேலி மகா வித்தி. | 72 | 25 | 34.72 | 84 | 29 | 34.52 | 81 | 28 | 34.57 | 60 | 21 | 35.00 | 72 | 22 | 30.56 |
| அத்தியார் இந்துக் கல்லூரி | 64 | 11 | 17.19 | 63 | 20 | 31.75 | 58 | 17 | 29.31 | 65 | 15 | 23.08 | 80 | 32 | 40.00 |
| இடைக்காடு மகா வித்தி. | 43 | 21 | 48.84 | 55 | 28 | 50.91 | 44 | 15 | 34.09 | 37 | 17 | 45.95 | 31 | 12 | 38.71 |
| கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி | 119 | 29 | 24.37 | 114 | 35 | 30.70 | 153 | 59 | 38.56 | 112 | 63 | 56.25 | 98 | 35 | 35.71 |
| கோப்பாய் மகா வித்தி. | 22 | 2 | 9.09 | 30 | 05 | 16.67 | 21 | 04 | 19.05 | 17 | 0 | 0.00 | 17 | 01 | 5.88 |
| ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி | 125 | 28 | 22.40 | 127 | 34 | 26.77 | 92 | 35 | 38.04 | 87 | 26 | 29.89 | 112 | 37 | 33.04 |
| உரும்பிராய் இந்துக் கல்லூரி | 53 | 8 | 15.09 | 39 | 04 | 10.26 | 58 | 07 | 12.07 | 40 | 04 | 10.00 | 69 | 05 | 7.25 |
| அச்செழு சைவப்பிரகாச வித்தி. | 34 | 6 | 17.65 | 33 | 06 | 18.18 | 42 | 05 | 11.90 | 32 | 01 | 3.13 | 44 | 14 | 31.82 |
| அச்சுவேலி சரஸ்வதி வித்தி. | 11 | 0 | 0.00 | 22 | 09 | 40.91 | 16 | 06 | 37.50 | 14 | 03 | 21.43 | 16 | 07 | 43.75 |
| சென்.திரேஸா பெண்கள் வித்தி. | 27 | 7 | 25.93 | 36 | 17 | 47.22 | 30 | 07 | 23.33 | 36 | 15 | 41.67 | 36 | 19 | 52.75 |
| ஆவரங்கால் மகாஜனா வித்தி. | 9 | 1 | 11.11 | 14 | 0 | 0.00 | 08 | 0 | 0.00 | 14 | 01 | 7.14 | 18 | 06 | 33.33 |
| ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. | 45 | 19 | 42.22 | 63 | 22 | 34.92 | 68 | 28 | 41.18 | 66 | 25 | 37.88 | 61 | 29 | 47.54 |
| கோப்பாய் சரவணபவானந்த வித்தி. | 20 | 11 | 56.00 | 20 | 04 | 20.00 | 22 | 06 | 27.27 | 20 | 06 | 30.00 | 19 | 11 | 57.89 |
| புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தி. | 16 | 0 | 0.00 | 19 | 01 | 5.26 | 20 | 02 | 10.00 | 13 | 03 | 23.08 | 20 | 04 | 20.00 |
| ஊரெழு கணேசா வித்தி. | 27 | 7 | 25.93 | 25 | 03 | 12.00 | 29 | 05 | 17.24 | 23 | 03 | 13.04 | 36 | 02 | 5.56 |
| உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. | 60 | 5 | 8.33 | 40 | 10 | 25.00 | 50 | 05 | 10.00 | 44 | 02 | 4.55 | 60 | 08 | 13.33 |
| வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி. | 20 | 5 | 25.00 | 15 | 01 | 6.67 | 17 | 09 | 52.94 | 14 | 04 | 28.57 | 16 | 12 | 75.00 |
| **கோப்பாய் கோட்டம்** | 767 | 185 | 24.12 | 799 | 228 | 28.54 | 809 | 238 | 29.42 | 694 | 209 | 30.12 | 805 | 256 | 31.85 |

*தோ.எ- பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை; த.பெ.நூ.வீ - (உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றோர் நூற்றுவீதம்.*
*த.பெ.எ- க.பொ.த.(உயர்தர) வகுப்புக்கு தகுதிபெற்றோர் எண்ணிக்கை*

கோப்பாய்க கல்விக் கோட்டத்தின் 2007 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை யாழ்ப்பாண வலயத்தினதும் யாழ்ப்பாணக் கோட்டத்தினதும் நல்லூர் கோட்டத்தினதும் பெறுபேறுகளுடனும் ஒப்பு நோக்குவதற்கும் அட்டவணை 6 இடமளிக்கின்றது.

இந்த அட்டவணைப் பிரகாரம், கோப்பாய் கோட்டத்தின் சித்திவீதம் (அதாவது, க.பொ.த உயர்தரவகுப்புக்குத் தகுதிபெற்றோர் நூறு வீதம்) யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களின் சித்வி வீதத்தை விட தாழ்வாக இருப்பது புலனாகின்றது:

அதுமாத்திரமன்றி, கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 55 மாணவர்கள் (6.83%) எந்த ஒரு பாடத்திலும் சித்தி பெறாமலிருப்பதும் எமது கவனத்தை ஈர்க்கின்றது.

**அட்டவணை 6 யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளின் க.பொ.த(சா.த)2007 முடிவுகள்**

| | தோ.எ. | உ.த. த.பெ.எ | உ.த. த.பெ.நூ.வீ. | கணிதம்த தமிழ் உட்பட பாடங்களுக்கு குறையாமல சித்திபெற்ற எ. | எல்லாப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்ற எ. |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாண வலயம் | 3302 | 1861 | 56.36 | 1912 | 102 |
| யாழ்ப்பாணக் கோட்டம் | 1366 | 861 | 63.03 | 877 | 12 |
| நல்லூர்க் கோட்டம் | 1131 | 744 | 65.78 | 765 | 35 |
| கோப்பாய் கோட்டம் | 805 | 258 | 31.80 | 270 | 55 |

*தோ.எ- தோற்றியோர் எண்ணிக்கை*
*உ.த.த.பெ.எ- க.பொ.த (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்றோர் எண்ணிக்கை*
*உ.த.த.பெ.நூ.வீ- க.பொ.த.(உயர்தர) வகுப்புக்கு தகுதிபெற்றோர் நூற்றுவீதம்*

**கலாநிதி த.கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நல்லூர்க் கோட்டத்திலும் கூட 35 மாணவர்கள் (3.09%) எந்த ஒரு பாடத் திலும் சித்திபெறாதிருப்பதும் கவன ஈர்ப்புக்கு அப்பாற்பட்டதன்று. (தொடரும்)

# அனலைதீவு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ரதோற்சவம்

**யாழ்ப்பாணம், அனலைதீவு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழாவானது (இன்று வெள்ளிக்கிழமை) நடைபெறுகின்றது இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ்ப்பாணத்தின்தென்மேற்கே காணப் படும் சப்த தீவுகளில் சைவ மணித்தீவு எனப் போற்றப்படும் அனலைதீவின் மேற்கு கடற் கரையை அண்டியதாக நயினா குளம், கூழாவடியுறை ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம் காணப் படுகின்றது. இற்றைக்கு சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய மேற்படி ஆலயத் தின் தோற்றம், வளர்ச்சி என்பன அனலை ஐயனாரின் அருள் மகிமை யும், மக்களது பக்தி வெளிப்பாட்டி னையும் பறை சாற்றி நிற்கின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன் னர் அன லைதீவின் மேற்கு சேத (இந்து) சமுத்திரத்தில் மரப்பேழை ஒன்று மிதந்து வந்து கரை ஒதுங் கியதாகவும் அதனை ஊரவர்கள் தூக்கிவந்து நயினாகுளம் கூழா மரத் தடியில் வைத்து திறந்து பார்த்த போது அதனுள் ஒரே கல்லில் அமை யப் பெற்ற பூரணை, புட்கலை சமேத ஐயனாரின் சிலாவிக்கிரகம் இருப் பதைக் கண்டு வியப்புற்று இது இறைவன் செயல் எனக் கருதி அவ் விடத்திலேயே வைத்த வழிபட்டு வர லாயினர்.

(ஐயனாருக்குரிய வழிப் பாட்டு முறையை தெரிந்திராத அக்காலப் பகுதியில் மேற்படி ஐயனாரை தாங்கி வந்த பேழையில் குறிப் பிடப்பட்டு இருந்த "கல்லல்துடல் ஐயனார்" என்ற வாசகத்தில் குறிப் பிடப்பட்ட தென்னிந்திய கிராமத் திற்கு அந்தணர்கள் சென்று அங் குள்ள வழிபாட்டு முறைகளை அறிந்து அதன் வழியில் பூஜைகள் இயற்றியதாக கூறப்படு கின்றது.

(குறிப்பு:- மேற்படி பேழை இன் னமும் ஆலயத்தில் பாதுகாக்கப்படு வதுடன், கல்லல்துடல் என்ற ஊர் தென் னிந்தியாவில் சிவகங்கை மாவட்டத்தில் கல்லல் என்று தற் போது வழங்கப்படும் ஊராகும்)

சிறிய கொட்டகைக் கோயில் காலம் காலமாக வளர்ச்சி கண்டு



இன்று பெரிய கட்டிடக் கோயிலாக விளங்குவதுடன் பஞ்சதள ராஜ கோபுரப் பணிகளும் நடைபெற்று வருகின்றது இவ்வாலய வளர்ச்சிக்கு ஐயனாரின் வருகையும் அவரது அருள் மகிமைகளின் காரணங் களாக அனலைதீவின் வளங்கள் பெருகியதும், மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றமையும் அடிப் படைக் காரணிகளாகும். வருடாந்த மகோற்சவம் ஆடி மாத பௌர்ண மியை தீர்த்தமாகக் கொண்டு பத்து நாட்கள் திருவிழா இடம்பெற்று வருகின்றது. இத் திருவிழா சுமார் 300வருடங்களுக்கு முன்பிருந்து இடம் பெற்று வருகின்றது. இதில் தேர்த் திருவிழா மிகப் பிரசித்தமான தாகும்.ஏனெனில் 250வருட பழை மையான சித்திரத்தேரையும், இலங்



கையில் மிகப் பெரிய சித்திர தேரை 1980களில் வெள்ளோட்டம் கண் டும் இன்றுவரை ரதோற்சவம் காணும் மிகப் பெரிய ஐயனார் கோவிலாக இவ்வாலயம் விளங்குகின்றது.

அனலை ஐயனார் ஆலய புதிய சித்திர தேர்பற்றி 1974இல் இந்திய ஸ்தபதிகளினால் கட்டப்பட தொடங்கி 1980களில் நிறைவு பெற்றது.

அனலை ஐயனாரின் சித்திரதேர் சுமார் 40 அடிகளைக் கொண்டது இதில் சிவ- விஸ்ணு ஐக்கியமான ஐயனாரின் பிறப்பு, நடராஜ மூர்த் தங்கள், விஸ்ணுவின் அவதாரங் கள், அனலை ஐயனாரின் வருகை, 1627 இல் சுனாமி தாக்கிய சம்ப வமும் ஐயனாரின் அபயமும் சிற் பங்களாக செதுக்கப்பட்டுள்ளது.

சிறப்பு மிக்க சித்திர தேரில் இன்று பூரணை புட்களை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆரோ கணித்து திருவீதிவலம் வந்து தீய வற்றை அழித்து, நல்லவற்றை அருளும் பொருட்டு பச்சை சாத்தி தேரிலிருந்து அவரோகணித்து திரு நடன காட்சி கொடுப்பார் அக் காட் சியை காண மக்கள் அலைகடலென அனலையம் பதியில் திரண்டு ஐய னின் அனுக்கிரகம் பெறுவோமாகா!

கந்தசாமி குமரன்
கொழும்பு பல்கலைக்கழகம்

# ரஷ்யா, ஜோர்ஜிய ஜனாதிபதிகள் 5 அம்ச திட்ட உடன்படிக்கைக்கு இணக்கம்

ரஷ்யாவும் ஜோர்ஜியாவும் 5 அம்சத்திட்ட



ரஷ்ய ஜனாதிபதியுடன் சார்க்கோஸி

உடன்படிக்கையொன்று தொடர்பில் இணக் கம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலை வராகவுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்க்கோஸி, ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் அந்நாட்டு ஜனாதிபதி திமித்ரி மெத்வேடேவு டன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்தே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மேற்படி உடன்படிக்கையானது படைப் பலத்தைப் பிரயோகிப்பதை நிறுத்தல், அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல், மனிதாபிமான உதவிகளுக்கான சுதந்திர அடைவு, ஜோர்ஜிய படையினர் தமது நிரந்தர படைத்தளங்க ளுக்கு திரும்பல், ரஷ்ய படையினர் முன்பு நிலைகொண்டிருந்த இடங்களுக்கு திரும்பல் ஆகிய 5அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதியின் மத்தியஸ்தத்து டன் முன்வைக்கப்பட்ட இந்த 5 அம்சத் திட்டத் திற்கு ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெட்வேடேவும், ஜோர்ஜிய ஜனாதிபதி சாகஸ்விலியும் இணக் கம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மேற்படி உடன்படிக்கை ஆவணமானது புரூஸெல்ஸிலுள்ள ஐரோப் பிய ஒன்றிய அமைச்சர்களால் பார்வையிடப் பட்ட பின் ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிக் கப்படவுள்ளதாக நிகொலஸ் சார்க்கோஸி கூறினார்.

மேலும், மேற்படி உடன்படிக்கையில் ஆரம்பத்தில் உள்ளடக்கப்பட்ட தென் ஒசீசியா மற்றும் அப்காஸியாவின் எதிர்காலம் தொடர் பாக சர்வதேசரீதியான கலந்துரையாடல் களை நடத்துவதற்கு வழிவகுக்கும் ஆறாவது அம்ச திட்டமொன்று, ரஷ்ய ஜனாதிபதியின் இணக்கத்துடன் நீக்கப்பட்டதாக சார்க்கோஸி குறிப்பிட்டார்.

தென் ஒசீசியா மற்றும் அப்காஸியா தொடர்பில் ஜோர்ஜியாவுக்குள்ள பிராந்திய ஒருங்கிணைப்பு ஒருபோதும் சந்தேகத்திற்கிட மாக மாற முடியாது என ஜோர்ஜிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

(அ-6)

## உலக தரிசனம்

# தேவாலயமொன்றின் அடியில் பண்டைய ரோமனிய ஆலயம்



இஸ்ரேலில் தேவாலயமொன்றின் அத்தி வாரத்தின் கீழ் பண்டைய ரோமானி யகால ஆலயமொன்றை அந்நாட்டு பூகர்ப்பவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற் றாண்டைச் சேர்ந்த மேற்படி ஆலயமானது. ஸிப்போரி நகரில் இடம்பெற்ற அகழ்வாராய்ச் சியின் போது கண்டறியப்பட்டுள்ளது.(அ-6)

# லெபனானில் பயணிகள் பஸ்மீது தாக்குதல் 9 படைவீரர் உட்பட 18பேர் பலி

(திரிபோலி)

வடலெபனானிய நகரான திரிபோலியில் பொதுமக்கள் சென்ற பஸ்ஸொன்றை இலக் குவைத்து புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் குறைந்தது 18பேர் பலியாகியுள்ளதுடன் 40 பேருக்கும் அதிக



மானோர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பலியானவர்களில் 9 படைவீரர்களும் உள்ளடங்குகின்றனர். லெப னானின் வடபகுதியில் அல்கொய்தா ஆதரவு பேராளிகளுக்கு எதிராக கடந்த வருடம் தாக்கு தல் ஆரம்பிக்கப்பட்டதற்கு பின்னர் அந்நாட் டுப் படையினர் அதிகளவில் உயிரிழந்த சம்ப வமாக இது விளங்குகிறது.

இக் குண்டு வெடிப்புச்சம்பவத்தையடுத்து அப்பிரதேசமெங்கும் இரத்த வெள்ளமாகக் காணப்பட்ட தாகக் கூறப்படுகிறது. இத் தாக்குதலுக்கு இதுவரை எவ ரும் உரிமை கோரவில்லை.

2005ஆம் ஆண்டு லெப னானிய முன்னாள் பிரதமர் ராபீக் அல்ஹரிரி படு கொலை செய்யப்பட்டது முதற் கொண்டு இடம் பெற்று வரும் குண்டுத் தாக்குதல் கள் மற்றும் அரசி யல் படுகொலைகளால் ஆட் டங் கண்டுள்ள லெபனா னின் ஸ்திரத்தன்மை மீதான பிந்திய அடியாக இத்தாக் குதல் கருதப்படுகிறது.

அண்மைய மாதங்களில் திரிபோலி நகரில் இடம் பெற்ற பிரிவினைவாத மோதல்களில், 22 பேருக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். (அ-6)



மியன்மாரின் பகோ நகரில் பெய்துவரும் அடை மழையை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தில், படகொன்றில் பயணிக்கும் சிறுவர்களை படத்தில் காணலாம்.

# கிஸா பிரமிட்டுகளுக்கு பாதுகாப்பு வேலி அப்பிரதேச வியாபாரிகள் கவலை தெரிவிப்பு

எகிப்திய கிஸா பிரமிட்டுகளுக்கு மெருகூட் டும் நடவடிக்கைகள் 27 மில்லியன் அமெ ரிக்க டொலர் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக மேற்படி பிரமிட்டுக் களை பார்வையிட வருபவர்களுக்கு இடை யூறு செய்பவர்களை தடுக்கும் வகையில் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுவருகிறது.

தற்போது 20 கிலோ மீற்றர் நீளமான வேலி யொன்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் அவ்வேலியில் மின் காந்த கதிர்ப்பு உணர்கருவிகள், கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள், எவராவது அத்துமீறி நுழைகையில் எச்சரிக்கை ஒலி எழுப்பும் கருவிகள் என்பன பொருத்தப்படவுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் மேற்படி வேலியானது உல்லாசப் பயணி களை நம்பி தொழில் நடத்தும் தமது வருமானத் தில் மண்ணை அள்ளிப் போடுவதாக உள்ள தென அப்பிரதேச வியாபாரிகள் தெரிவிக் கின்றனர். (ஓ-6)

# நல்லாட்சியை பிரகாசிக்கச் செய்வதற்கு மோசடிக்காரர்களை விரட்டி அடிக்கவேண்டும்

## ரணில் விக்கிரம சிங்க

(கொழும்பு)

எதிர்வரும் 23ஆம் திகதியுடன் ஊழல் மோசடிக்காரர்களை வீட்டுக கனுப்பி உண்மையான ஆட்சி ஒன்றுக்கு வழிசமைப்பதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு



பாடம் புகட்ட மக்கள் ஒன்று திரள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கதெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெற உள்ள வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் சூடு பிடித்திருக்கின்ற நிலையில் வடமத்திய மாகாண பிரசாரக் கூட்டங்களில் ஈடுபட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, வட மத் திய மாகாணத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை போர்ட்டிப் பிரேமலால் முதலமைச்சராக நிர்வகித்து வந்துள்ளார்.

இவுரை போஷிப்பதற்கு நான்கு வருட காலமாக மத்திய அரசாங்கத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கும் கூட்டமைப்பு அரசாங்கமும் அதன் ஜனாதிபதியும் வழங்கி வந்த ஆதரவின் அடிப்படையில் வடமத்திய மாகாணம் இன்று சுகாதாரக் கேட்டுக்கு இலக்காகியுள்ளது. இங்குள்ள மக்களை நோயாளர்களாகவும் கல்வியில் பின்தங்கியவர்களாகவும் ஆக்கி விட்டுள்ள சாதனையும் பெருமையும் போர்ட்டி பிரேமலாலையே சாரும்.

இன்றைய நிலையில் வடமத்திய மாகாணத்தில் 10ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிறு நீராக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஏனைய சுகாதாரத் திட்டங்கள் வீழ்ச்சி கண்டுள்ளன.

இலங்கையிலேயே கல்வியில் மிக மோசமான பெறு பேறுகளைக் கொண்ட மாவட்டமாக பொலனறுவை மாவட்டம் தெரிவாகியுள்ளமை வேதனைக்கும் வெறுப்புக்கும் உரிய விடயமாகும். அரசாங்கம் நினைத்திருந்தால் இவைகளில் இருந்து மக்களுக்குமீட்சியைப் பெற்றுக்கொடுத்திருக்க முடியும்.

ஆனால்,அரசாங்கம் அதில் கவனம் செலுத்தத் தவறியதால் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எம்மீது கொண்ட பயத்தினால் தாக்குதல்களை நடத்தி வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்ற அரசாங்கம் ஒரு வன்முறை அர சாங்கம் அல்லது ஆட்சியாளர்கள் என்பதனை உறுதிப்படுத்தியுள்ளது.

மக்கள் விரும்புவது நல்லாட்சியையும் நல்ல தலைமைத்துவத்தையும் மட்டுமே. ஊழல் மோசடிகளை எவரும் விரும்புவதில்லை. 2004 முதல் மத்திய அரசாங்கத்தை தக்க வைத்துக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம், பொதுமக்களுக்கு போலியான முகத்தை காட்டிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதன் பிரதிபலன் தான் பொருளாதார வீழ்ச்சி, பணவீக்கம், விலைவாசி அதிகரிப்பு, மக்கள் வாழ முடியாத நிலைபோன்றவை.

இதன் ஒரு அங்கமாக போர்ட்டி பிரேமலால்வடமத்தியமாகாணத்தை விழுங்கி ஏப்பம் விட்டு விட்ட நிலையில் மீண்டும் பொது மக்களிடம் சென்று வாக்குக் கேட்டு நிற்கிறார்.

போர்ட்டியின் ஆட்சியில் மக்கள் அனுபவித்த பலாபலன்கள் போதுமானதாகும். இனியும் அவருக்கு வட மத்திய மாகாண மக்கள் இட்மளிக்கப் போவதில்லை.

எனவே, நல்லாட்சியை பிரகாசிக்கச் செய்யும் வகையில் வடமத்திய மாகாணத்தை வளமுள்ள மாகாணமாகக் கட்டியெழுப்புவதற்காக முதலில் மோசடிக்காரர்களை விரட்டியடிக்க வேண்டும் என்றார். ஓ

# மக்களின் நலன்களை இராணுவ ரீதியாக நிறைவேற்ற முடியாது

## தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வடபகுதியில் மோதல்கள் இடம்பெற்றுவரும் நிலையில் மக்களின் நலன்களை இராணுவ ரீதியாக நிறைவேற்ற முடியாது என தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

இரு தரப்புக்குமிடையில் தொடர்ந்து வரும் மோதல்களால் இலட்சக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர்களின் தேவைகளை இராணுவ ரீதியான நடவடிக்கை மூலம் தீர்த்துவைக்க முடியாது எனவும் சமாதானப்பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள் ளது.

வட பகுதியில் உள்ள மக்களின் பாதுகாப்பை இரண்டு தரப்பினரும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இடம்பெயர்ந் திருக்கும் மக்களுக்கான மனித நேய உதவிகளை முன்னெடுப் பதற்கு ஐ. நா. நிறுவனங்க ளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங் களுக்கும் இலங்கை அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தக்கூடாது எனவும் மன்னார் ஆயர் ஜோசப் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

மன்னார் ஆயரின் கோரிக்கையுடன் தாமும் உடன் படுவதாக தெரிவித்திருக்கும் தேசிய சமாதானப் பேரவை ஆயரின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரி வித்துள்ளது.

மக்கள் ஒரு போதும் மனித கேடையங்களாக பயன்படுத்தக் கூடாது எனவும் பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடத்தவேண்டாம் எனவும் தேசிய சமாதானப்பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து மனித நேய நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஒரு இடத்தில் இருந்து பொதுமக்கள் வெளியேற விரும்பினால் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு அமைய அவர்களை சுதந்திரமாக வெளியேற விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் அனுமதிக்க வேண்டும் எனவும் சமாதானப்பேரவை தெரிவித்துள்ளது.

இரண்டு தரப்பினரும் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வடபோர் முனைகளில் தொடரும் தாக்குதல்களால் இலட்சக் கணக்கானமக்கள் இடம் பெயர்ந்திருப்பதுடன் பலர் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த வண்ணம் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஓ


**வட-கிழக்கு கடற்றொழில் நீரியல்வளப் பண்பாட்டு அமையம் (நெவாட்)**

**NEFAD Foundation Ltd**

**ஆர்வத்தினை வெளிப்படுத்தல்**

(Expression of Interest)

140'X110' விஸ்தீரணம் கொண்ட யாழ்வலை உருவாக்கத் தின்கட்டிட நிர்மாண வேலையின் கட்டம் II.(Stageii) (அத்திவார மட்டத்திற்கு மேல் சுவரைமட்டம் வரையான) ற்கு கூலி அடிப்படையில் ஒப் பந்தம் செய்ய விரும்புபவர்களிடமிருந்து ஆர்வத்தினை வெளிப்படுத்தும் (Expression & Interest) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மேற்படி விண்ணப்பத்தில் தங்களது அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டவேலை, தகமை விபரங்களையும் பூர்த்தி செய்து நீள,தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டம்II வேலைக் கான கூலிக்கோரல்" என எழுதி இயக்குநர் கியூடெக் நெவாட்14, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 20-08-2008ற்கு முன்னர்கிடைக்கக் கூடியவாறு நேரிலோ அல்லது பதிவுத் தபா லிலோ அனுப்பிவைக்கவும்.

*இயக்குநர்*


*கியூடெக் நெவாட் 14 மத்தியூஸ் வீதி,*

*யாழ்ப்பாணம்.*

(சி/1406)


### நல்லூரான் திருவடிக்கு இன்று

## மஞ்சத்திருவிழா



### வேல் கொண்டு வினைஅகற்று கந்தா

மஞ்சத்தில் பவனி வரும் நல்லைக் கந்தா
மக்கள் அறிவர் நின் கருணை மால் மருகா
வேல் கொண்டு வினை அகற்று கந்தா
வேண்டும் வரம் சமாதானமே வேண்டும் முருகா
சாந்தியுடன் சமாதானம் கதிர்வேலால் தந்துவிடு
நல்லூரான் உன் திருவடியே சரணம் ஐயா.....!

*நாகமணி மகேந்திரலிங்கம் -நிருஷன்*
*கோப்பாய் தெற்கு- கோப்பாய்.*

### குஞ்சரியின் நாயகனை ஏற்றிப் போற்றித் தொழுவோம்

தஞ்சமென நாடிவந்து திருநல்லூரில் கூடி
விஞ்சுபுகழ் வேலவனை கைகூப்பி நின்று
மஞ்சமதைத் தொட்டிழுக்கும் தொண்டுசெய்து தேவ
குஞ்சரியின் நாயகனை ஏத்திப் போற்றித் தொழுவோம்.

*கவிமணி கந்தமுருகேச தாசனார்*

### மஞ்சமன்று அற்புதஞ்செய் மண் இனித் தாங்காதையா

பச்சிளம் பாலர் தொட்டு பழுத்த பழங்கள் வரை
பதறியே மாழும் பாழும் பரிதாப நிலையைக் கண்டும்
கிஞ்சித்துங் கவலையின்றி உன் குஞ்சரிகளோடு நீ
மஞ்சத்தில் இன்று வாறாய் மனம் மிக வேகுதையோ
அஞ்சு முகஞ் தோன்றில் ஆறுமுகந்தோன்று மென
அறைந்த நக்கீரன் சொல் அநியாயம் ஆகலாமோ?
அன்றோடு அருள் பொன்றிட வில்லையென
இன்றே ஓர் அற்புதஞ்செய் இனிமேலுந் தாங்காதையா

*கவிமணி- அன்னைதாஸன்*
*உரும்பிராய்.*

### திருமஞ்சம் ஏறி தீர்வு தர வருகிறான்

மஞ்சமேறி அருள்வாய் நல்லைக் கந்தா
மானிலத்தோர் வாழ்வுக்கு மாற்ற மருள் வாய்
அஞ்சேலென அபய மளித்து காத்தருள்வாய்
அவலங்கள் போக்கியே வாழ்வருள்வாய்
தஞ்சமென வந்தோர்க்கு கருணை செய்வாய்
தமிழினத்தோர் வேண்டுதலை ஏற்றருள்வாய்;
பஞ்சம் பிணி பட்டினியெல்லாம் தீர்த்தருள்வாய்
பாங்கான தீர்வுக்கு வழிகாட்டி யருள்வாய்

*மதுரகவி- காரை- எம்-பி-*
*அருளானந்தன்-*

### மக்கள் மனத்துயர் போகிடு

மஞ்சத்தின் மீதேறி மகிமையுடன் வரும் முருகா!
மண்ணான பூமிகிழித்து வரும் மாணிக்க வேலவனே!
முக்காலமும் உணர்த்தும் பரம் பொருளே! நல்லூர் கந்தா!
முருகப் படையே மருகனான ஞானப் படையே!
பொய்ம்மை அழிக்கும் ஆறுபடை முருகா!
முக்கண்ண மந்திரம் மூலமான நாதமே நல்லூரானே
மலையான மயிலவா ! மக்கள் மனத்துயரை போக்கிட
மகிழ்ச்சியுடன் வந்து அருளீந்தருள் வாய் முருகா !

*சின்கந்தையா பொன்னாவளை காரைநகர்.*

### உன்னை வழிபட அருள்தா

கோலமா மஞ்ஞை தன்னில்
குமரிக ளிருவ ரோடு
வேலவா அமர்ந்து நீயும்
வேண்டுவோர்க் கருளு கின்றாய்
பாலகன் என்று உன்னைப்
பணிந்திடா அவுணர் பட்டார்
மாலவன் மருகா உன்னை
வழிபட அருளைத் தாராய்

*சி-வெற்றிவேலு வட்டுக்கோட்டை.*

## ஐ.நா, சர்வதேச, உள்ளூர், அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒழுங்கமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைத்திட்டங்களில் ஐக்கிய நாடுகள், சர்வதேச, வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் கணிசமானதாக கொள்ளப்படுகின்றது.

இந் நிறுவனங்கள் நிதித் திட்டமிடல் அமைச்சின் வழிகாட்டுதல்களிற்கு அமைய செயற்படுவதுடன் அவ்வமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு வளத் திணைக்களத் திலும், 1980ஆம் ஆண்டு 31ஆம் இலக்க தொண்டு சமூக சேவைகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் 1998ஆம் ஆண்டு 8ஆம் இலக்க திருத்த சட்டத்தின் அடிப்படையிலும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் அரசசார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்திலும் பதிவுசெய்து கொள்வதுடன் காலத்திற்குக் காலம் நிதி, செயற்பாடுகள், முன்னேற்றம் வங்கி மற்றும் கணக்காய்வறிக்கைகள் தொடர்பாகவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்திற்கும், மாவட்ட செயலகத்திற்கும் அறிக்கை சமர்ப்பித்தல் அவசியமானதாகும் என யாழ் அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

இந் நிறுவனங்களினால் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்கள் அனைத்தும் மாவட்ட மீளாய்வுக் குழுவின் அனுமதி பெற்ற பின்பே நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

மாவட்ட மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் திட்டங்கள் மக்களது தேவைகளை பிரதிபலிப்பதாகவும் அவர்களின் பங்களிப்பினைப் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள், துறைசார் திணைக்களங்கள் என்பவற்றின் ஆலோசனைகளை பெற்றிருப் பதுடன் செயற் திட்டத்திற்கான அவசியம் தொடர்பில் விதந்துரைகளையும் அவர்களிட மிருந்து பெற்று திட்டத்துடன் சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

நிறுவனங்கள் திட்டங்களை உருவாக்குகின்ற போது திட்டங்களின் மூலம் மக்கள் அதிக நன்மைகளைப் பெறுவதனையும், அவர்களது வாழ்வாதார் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் ஏற்படுவதனையும் உறுதி செய்து கொள்வதுடன் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனங்களின் நிர்வாக செலவினங்கள் 10%ற்கு மேற்படாதிருப்பதனையும், அவர்களின் திட்ட செயற்படுத்துகைக்கான தகமையினையும் இயலளவினையும் நிதி வழங்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக்கொள்வதும் அவசியமானதாகும்.

மக்களிற்கு பயனளிக்கக் கூடிய எந்தத் திட்டங்களிற்கும் மாவட்ட நிர்வாகம் முன்னுரிமை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## மின்சாரமில்லாததால் கிராமமக்கள் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறையில் மீன்பிடிப் பிரதேசமான மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் பல வருட காலமாக மின்சாரமில்லாததால் கிராமமக்கள் தாங்கள் பிடிக்கும் கடலுணவுகளை பதப்படுத்தி விற்கமுடியாது பெரிதும் கஷ்டமடைவதாக தெரியவருகின்றது. (ஓ-72)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலையின் ஏற்பாட்டில் க.பொ.த உ/த மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியல் பாடத்திற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கை யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பி.கணேஷ் நிகழ்த்துவார்.

இக் கருத்தரங்கில் வடமராட்சி வலயப் பாட்சாலையைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி பயனடையுமாறு அம்பன் அ.மி.த.க்.பாடசாலை அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## சீமெந்தின் விலையை ரூ 1500க்குள் மட்டுப்படுத்த வர்த்தகர்கள் இணக்கம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் ஒரு 'பைக்கற்' சீமெந்தின் விலையை 1500 ரூபாவுக்குள் விற்பனை செய்வதற்கு தனியார் வர்த்தகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண தெரிவித்தார்.

இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ள மூன்று வர்த்தகர்களுக்கு 1750 மெற்றிக் தொன் சீமெந்தை வழங்குவதுடன் 3800 மெற்றிக்தொன் சீமெந்து திருமலை துறைமுகத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வரப்படவுள்ளது.

கப்பல் மூலம் சீமெந்தை கொண்டுவரும் தனியார் வர்த்தகர்கள் 2000 ரூபா வரை விற்பனைசெய்தனர். எனினும்லங்கா சீமெந்து கம்பனி குடாநாட்டில் 1450 ரூபாவுக்கே விற்பனை செய்தது.

அதிக விலைக்கு விற்பனை செய்வது குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரினூடாக கேட்டுக்கொண்டார்.

தற்போது அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ணவுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், யாழ்ப்பாணம் ஸ்ரீ முத்துமாரியம்மன் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு 15 ஆயிரம் பைக்கற் சீமெந்தும், சண்ரைஸ் டிரேடர்ஸ்க்கு 10 ஆயிரம் பைக்கற் சீமெந்தும், அம்பிகை களஞ்சியத்திற்கு 10 ஆயிரம் பைக்கற் சீமெந்தும் வழங்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

## இலங்கை கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி

(யாழ்ப்பாணம்)

5ஆவது சர்வதேச கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்கள் நேரடியாக பரீட்சை மண்டபத்திற்கு காலை 9 மணியளவில் வந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொண்டு பரீட்சைக்குத் தோற்றுமாறு இப்போட்டிக்கான வட மாகாண இணைப்பாளராக நியமனம் பெற்றுள்ள கலாநிதி நா. சிவயோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலதிக தகவல்களை யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைத் தலைவரின் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் 222 2259. (ஓ)

## பகவத்கீதை உபந்நியாசம்

கோண்டாவில் கிழக்கு நாரயணா வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் வழமைபோல இன்று 40 ஆவது வாரமாக மாலை 4.30 மணிமுதல் 6.30 மணிவரை இடம்பெறும்.

ஆத்மீக நிகழ்வில் பஜனாமிர்தம், திவ்விய நாமா வளி அர்ச்சனை, ஆராதனை, தியானம், நற்சிந்தனை மாணவர்களுக்கான கல்விசார் நிகழ்வுகள் அதைத்தொடர்ந்து கீதோபதேச வித்தகர் ஸ்.கே.என்.தவராஜா நிகழ்த்தும் பகவத்கீதை உபந்நியாசம் இடம்பெறும். ஆத்மீக ஆர்வலர்கள் கலந்து பயன்பெறுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீகசபா அழைக்கின்றது. ஓ

## தரம் 5 புலமைப்பரீட்சை ஆவணங்களைப் பெறவும்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய ஆவணங்கள், வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ளதெனவும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் அலுவலக நேரத்தில் வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் மேற்படி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (அ-29)


## கொமர்ஷல் வங்கியின் 'சுப்பர் சேவர்'

இலங்கையில் மிகச்சிறந்த வங்கியிலிருந்து 12% வட்டியுடன் புதிய சேமிப்பு கணக்கு

◆ *சுப்பர் சேவர் கணக்கு (Super Saver) என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்க முடியுமா?*

கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் என்பது அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளாகளின் தேவையை நிவர்த்திப்பதற்கு எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சேமிப்புக் கணக்காகும்.

இக்கணக்கிற்கு 12% விசேட வட்டி வீதத்தை வழங்குகிறோம். இதன் வருடாந்த விளைவு வீதம் (APR) 12.68% அமைகின்றது. உயர்வட்டி வீதம் வழங்கப்பட்டாலும் பண மீளப் பெறுவனவு எண்ணிக்கையில் கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது.

◆ *கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் அறிமுகப்படுத்துவதற்கு பிரதான நோக்கம் என்ன?*

எந்தவொரு தராதர சேமிப்புத் திட்டத்தின் வட்டி வீதங்களின் ஊடாக தற்போது நிலவும் உயர்ந்த பணவீக்க வீதத்தை சமாளிப்பது கஷ்டமானது.

பூரண செயற்பாட்டு வசதியுடன் உயர் வருவாயைத் தரும் சேமிப்புக் கணக்கின் அவசியத்தை காத்திரமான சேமிப்பாளர்கள் மத்தியில் அடையாளம் கண்ட பின் சுப்பர் சேவரின் அறிமுகமானது, தவணை வைப்புகள் அல்லது அரசாங்கம் பிணைகளை விட அதிக சாத்தியமான வருவாயும் அதிக நெகிழ்வுத் தன்மையுமுள்ள, ஒரு சேமிப்புக் கணக்கை விரும்பும் சனத் தொகையின் ஒரு பெருவாரியான பிரிவினால் வரவேற்கப்படும் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும்.

தற்போதுள்ள பணவீக்க நிலைவரத்தில் எமது வாடிக்கையாளர்கள் தங்களின் மேிப்புகளின் நிஜமான பெறுமதியை தக்கவைப்பதற்கு உதவுவதற்கு உயர்வட்டி சேமிப்பு கணக்கு உசிதத்தை வழங்குவதும் வங்கியின் விருப்பமாகும்.

◆ *இந்த சேமிப்புக் கணக்கிற்கு ஒரு வைப்புப்புத்தகம் வழங்கப்படுமா?*

ஆம், கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்ய ஒரு விசேட வைப்புப் புத்தகத்தை நாம் வழங்குகிறோம். எனினும், வாடிக்கையாளர்கள் தமது சேமிப்புகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க ஒரு பதிவுப் புத்தகத்தையோ அல்லது (மாதாந்த அல்லது காலாண்டு) கணக்கு அறிக்கையோ பேண முடியும்.

◆ *சுப்பர் சேவர், இதைப்போன்ற கணக்குகளுடன் ஒப்பிடுகையில் ஏன் தனித்துவம் வாய்ந்தது?*

கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் வழங்கும் 12% வட்டியானது உள்ளூர் வங்கியியல் துறையில் பொதுவான சேமிப்பு கணக்கின் பேரில் அளிக்கப்படும் ஒரு மிக உயர்ந்த வீதமாகும். இந்த வதம் குறிப்பாக கவர்ச்சியூட்டுவது என்னவென்றால் இது அதி நம்பிக் கைக்குரிய ஸ்திரமான உள்ளூர் வங்கியினால், உள்ளூர், தனியார் வங்கிகளின் மத்தியில் அதிக தரச்சிறப்புகளை பெற்ற வங்கியினால் வழங்கப்படுதலாகும். கணினியில் இணைக்கப்பட்ட கிளைகள் மற்றும் சுப்பர் மார்கெட் வங்கியியல் கருமபீடங்கள் கொண்ட மிகப்பெரிய வலையமைப்பினையும் நாட்டின் எப்பகுதியிலும் பணமீட்டல் செய்வதற்கு வசதியான நாட்டிலுள்ள தனியொரு மிகப்பெரிய ATM வலையமைப்பினையும் கொண்ட வங்கியினால் இது வழங்கப்படுவது மற்றொரு முக்கிய அம்சமாகும்.

◆ *கொமர்ஷல் வங்கி சுப்பர்சேவர் கணக்கு ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்ச தேவை என்ன?*

18 வயதுக்கு மேற்பட்ட எவரும் குறைந்த பட்சம் ஆரம்ப வைப்பாக ரூ.50,000 செலுத்தி கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் கணக்கைத் திறக்க முடியும்.

◆ *சுப்பர் சேவர் கணக்கின் ஊடாக வழங்கப்படும் ஏனைய நன்மைகள் யாவை?*

சுப்பர் சேவர் வழங்கும் ஏனைய நன்மைகளாக சகல கணக்கு வைப்பாளர்களுக்கும் இலவச உடனடி CAT/ DEBIT அட்டை, அவர்களின் வங்கி மீதத்தின் 80% வரை துரித தனிப்பட்ட கடன்கள், ரூ.500 விசேட சேர்வு கட்டணத்தில் இணைய வங்கியியல் வசதிகள் ஆகியவை அமைகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ள வசதிகளுடன் 'இலங்கையின் மிகச் சிறந்த வங்கி' யுடன் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை வைக்கும் சந்தர்ப்பமும் கிடைக்கின்றது.

◆ *கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் கணக்கை ஆரம்பித்து செயற்படுத்துவது எப்படி ?*

கொமர்ஷல் வங்கியின் 165 கிளைகள் அல்லது சுப்பர் மார்கெட் வங்கியியல் கருமபீடங்கள் எதன் மூலமாகவும் சுப்பர் சேவர் கணக்கைத் திறக்க முடிடியும்.

இந்த நிலையங்கள் எதிலிருந் தும் கொமர்ஷல் வங்கியின் 311க்கு மேற்பட்ட ATM இயந்திரங்களில் மற்றும் உலகெங்கிலும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட ATM களிலும் பண மீள் பெறுவனவுகளை செய்யும் வசதியையும் அடைகிறீர்கள்.

இதேபோல், மேலே குறிப்பிட்டுள்ள 165 நிலையங்களில் எதிலும் சுப்பர் சேவர் கணக்கிற்கான வைப்புகளைச் செய்யமுடியும்.

இந்தக் காரணிகளால், கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர், இன்றைய தொழில்சார் விற்பனர்களின் காத்திரமான வாழ்க்கை முறைக்கு ஏற்றதான மிகவும் சௌகரியமான நிதித் திட்டமாக அமைகின்றது.

◆ *கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் குறித்து மேலதிக தகவல்களை ஒருவர் எவ்வாறு பெறலாம்.?*

நீங்கள் எமது 165க்கு மேற்பட்ட கிளைகள் எதிலும் அல்லது நாடெங்கிலுமுள்ள சனிக்கிழமை விடுமுறை வங்கியில் நிலையங்கள் சுப்பர் மாாக்கெட் கருமபீடங்களில் அல்லது எமது இணையத்தளமான www.combank.lk இல் மேலதிக தகவுல்களை பெற்றுக்கொள்ள முடியும். மற்றும் சுப்பர் சேவர் கணக்கை திறப்பதற்கான விண்ணபபப்படிவத்தை இணையத் தளத்தில பெறவும் முடியும். ◆

> அரசியல் என்பது சந்திரன் போன்றது. சில சமயம் இருட்டும்; சில சமயம் முழு நிலவாக இருக்கும்.
>
> – போலாந்து

வலம்புரி

## கோத்தபாயவின் கருத்து நாராயணனுக்கே வெளிச்சம்

இலங்கை அரசு தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொள்ளத் தவறிவிட்டதென இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்திருந்தார்.

நாராயணனின் கருத்து இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தகுந்த தீர்வைக் காணவில்லை என்பதையே சுட்டியிருந்தது.

இதுபற்றி இப் பகுதியில் நேற்றும் பிரஸ்தாபித்திருந்தோம். எம்.கே.நாராயணனின் கருத்துக்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, நாராயணனின் கருத்தை அரசுக்குச் சாதகமாக்கிக் கதை கூறியுள்ளார்.

இங்கு கூட நேர்மைத் தன்மை நிரூபிக்கப்படவில்லை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். நாராயணனின் கருத்து தமிழ் மக்களின் மனங்களை இலங்கை அரசு வெல்லாத வரை போர் மூலம் வெற்றி காண முடியாதென்பதாகும்.

அவ்வாறாயின் அதன் உட்பொருள் இலங்கை அரசு தற்போது முன்னெடுத்து வரும் போரில் வெல்ல முடியாது என்பதே.

ஏன் அவ்விதம் போரில் வெல்ல முடியாதெனில், தமிழ் மக்கள் அரசின் பக்கம் இல்லை என்பதை நாராயணன் தெளிவுபடக் கூறியுள்ளார்.

காலத்திற்குக் காலம் தமிழ் மக்களை சங்காரம் செய்யும்போது அவர்கள் எப்படி அரசின் பக்கம் நிற்பார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அடிப்படை மூலத்தைக் கண்டறிய வேண்டும்.

அவர்களும் இந் நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கும் பெரும்பான்மையினம் அனுபவிக்கும் உரிமைகளை அனுபவிக்கும் உரிமை உண்டு. அவர்கள் தம்மளவில் தமக்கான வாழ்வியல் கோலங்களை, சமூக பொருளாதார – அரசியல் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளவும் உரிமையுண்டென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான வழி வகைகள் ஜனநாயக ரீதியில் கண்டறியப்பட்டிருக்க வேண்டும்.

இதைவிடுத்து எந்த உரிமைகளையும் வழங்காது போர் நடத்தினால் அந்தப் போர் வெல்லவே வெல்லாது. இதுவே நாராயணனின் கருத்து.


எனினும் இக் கருத்தை மூடி மறைத்த கோத்தபாய ராஜபக்ஷ, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணும் விடயத்தில் இலங்கை அரசு எடுத்து வரும் நேர்மைத் தன்மையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறுவதில் அரசு பின்னடைவு கண்டுள்ளதாகவும் இதனையே எம்.கே. நாராயணன் சுட்டிக்காட்டியதாகவும் கூறுகின்றார்.

அவரின் கருத்து இலங்கை அரசு நேர்மைத் தன்மையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளதென்பதாகும். எப்படியிருக்கின்றது நிலைமை? எல்லாம் அந்த நாராயணனுக்கே வெளிச்சம்.

# வேண்டியவரம் தரும் வரலட்சுமி விரதம்

## இன்று வரலட்சுமி விரத நாளாகும்

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அட்ட ஐஸ்வரியங்களையும் தந்து நல்லருள் புரிபவள் மகாலட்சுமி ஆவாள். தனம், தானயம், தைரியம், ஜெயம், வீரம், சந்தானம், வித்தை, கலை எனப்படும் எண்வகைச் சிறப்புக் களையும் மகாலட்சுமி வழிபாட்டினால் நாம் பெறலாம். இத்தகு சிறப்புக்கட்குரிய மகாலட்சுமியின் அருள் ஆண்டுதோறும் வரும் ஆவணி மாத பூரணதினத்திற்கு முன்வரும் வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும் வரலட்சுமி விரத வழிபாட்டின் மூலம் சிறப்பாகக் கிடைக்கின்றது.



வேண்டும் வரங்களை நாடி மேற்கொள்ளப்படும் விரதம். ஆதலால் வரம் தரும் வரலட்சுமி விரதமாக இந்நாள் போற்றப்படுகின்றது. மக்கட்கு வேண்டிய ஐஸ்வரியத்தையும், சுபீட்சத்தையும் தரும் வரலட்சுமி விரதத்தினைப் பெரும்பாலும் இல்லத்தரசிகளே வீடுகளிலும், கோவில்களிலும் விரதம் அனுட்டித்தும், வழிபாடுகள் செய்தும் நூல்கட்டியும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

விவாகமான பெண்கள் மட்டுமின்றிக் கன்னிப்பெண்களும் தங்களுக்கு ஏற்பட வேண்டிய நல்ல சௌபாக்கியங்களை வேண்டி இந்த வரலட்சுமி நோன்பிற் கலந்துகொள்வார்கள். ஆடவர்களும் இந்த நோன்பினை அனுட்டிப்பதன் மூலம் நோயற்ற வாழ்வைப் பெறலாம் என்பார்கள்.

"சித்திரநேபி" என்பவன் இவ்விரதத்தை நோற்று வழிபாடுகள் செய்ததன் மூலம் தன்பெரு நோய் நீங்கப் பெற்றான் என்றும், சாருமதி என்ற பெண்ணும், நந்தன, விக்கிரமாதித்தன் முதலானோரும் வரலட்சுமி நோன்பு நேற்றுத்தாம் விரும்பிய வரங்களைப் பெற்று சிறப்படைந்தனரெனவும் பவிஷ்ய புராணம் எடுத்துக் கூறுகின்றது.

வரலட்சுமி விரதத்தின் சிறப்புப் பற்றியும், அதனைப் பெண்கள் அனுட்டிப்பதால் கிடைக்கும் பெருமை பற்றியும் ஸ்ரீ பரமேஸ்வரன், பார்வதிதேவியாருக்கு உப தேசித்ததாகவும், பார்வதியம்மையார் இதனைத் தாமும் அனுட்டித்ததுடன் பெண்கள் இதனை அனுட்டிப்பதால் லட்சுமி கடாட்சம் பெறுவதுடன், தாம் வேண்டிய வரங்களைப் பெறலாம் எனவும் வேண்டினார்.

இதனாற் திருமணமான பெண்கள் கணவன் நலன் கருதி தலைநோன்பு என இதைக் கொண்டாடுவார்கள். ஆக்கத் திறகும் நல் அருளுக்கும் தெய்வமான வரலட்சுமியை ***இருக்கு வேதமும்***, சூரிய மண்டல மத்தியில் வீற்றிருக்கும் மகாலட்சுமியாக ***யசுர்வேதமும்***, நல்லன, தீயனவற்றிற்கான தேவதைகளில் நல்லனவே செய்யும் சிறப்புடையவளாக ***அதர்வண வேதமும்*** மகாலட்சுமியைச் சிறப்பித்துள்ளன.

திருப்பாற்கடலில் அமிர்தம் கடையும் போது தோன்றியவளும், மகாவிஷ்ணுவின் பேரன்பிற்குரியவளும், அபய, வரத முத்திரையுடன், மேல் இருகரங்களிற் தாமரைத் தாங்கியவளும், சௌந்தர்யமான வதன முடையவளும், தன்னை அண்டினோர்க்கு அஷ்டஐஸ் வர்யங்களும் தந்து நல்லருள் புரிபவளும் ஆகிய ஸ்ரீதேவி யாம் மகாலட்சுமியைத் தூயமனதுடன் வழிபட்டு, வரலட்சுமி விரத நன்நாளில் நோன்பிருந்து ஒன்பது முடிச்சுக்கள் கொண்ட மஞ்சள் நூலைப் பூசனை செய்து வலக்கரத்தில் அணிந்து வழிபாடுகள் செய்வதன் மூலம் வேண்டும் வரங்களைப் பெற்று நாமும் நல்வாழ்வு காண்போமாக.

நீர்வைமணி

# தமிழ்மக்களின் பிரச்சினைகளை அதிகார பகிர்வின் மூலம் தீர்க்கப்படும்

## ஐ.தே.க. பா.உ. தயாசிறி ஜெயசேகர

(கொழும்பு)

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு மோதல்களை முன்னெடுத்தாலும் அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் அரசாங்கத்தின் பக்கம் இல்லாமல் மோதல்களில் இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் வெற்றிகொள்ள முடியாது என இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என். கே. நாராயணன் கூறியிருந்தார்.

இந்த கருத்தையே ஐக்கிய தேசியக்கட்சி முன்பிருந்து கூறி வந்ததாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார். ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாட்டையே தற்பொழுது இந்தியாவும் வெளிப்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்த வேண்டும் எனக் கூறினார்.

பயங்கரவாதம் மோதல்கள் மூலமே தோற்கடிக்கப்பட வேண்டும் அவ்வாறு பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும், தமிழர்களின் பிரச்சினைகள் அதிகாரப் பகிர்வின் மூலமே தீர்க் கப்படவேண்டும். இதுவே எமது உறுதியான நிலைப்பாடு என் றார். தயாசிறிஜெயசேகரன்

யுத்தத்தின் மூலமே தீர்வு காண முடியாது என்பது இந்தியா தெட்டத்தெளிவாக இலங்கை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியுள்ளது எனக்குறிப்பிட்டார். அவர் இந்த விடயத்தின் தமது நிலைப்பாட்டை அரசாங்கம் வெளியிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.



அதிகாரப்பரவலாக்கல் தீர்வை வழங்குவதற்கு ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.போன்ற கட்சிகள் தமது எதிர்ப்பினை தெரி வித்து வருகின்றனர் எனவும் இவற்றின் எதிர்ப்பினால் அரசாங்கம் இராணுவ ரீதியான தீர்வினை நோக்கிச் சென்றிருப் பதாக அவர் குற்றம் சாட்டினார்.

அத்துடன் தமது கட்சி ஆட்சிக்கு வந்ததால் உடனடியாக 17ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல் படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கான அரசியல் அமைப்புச் சபை உருவாக்கப்படும் எனவும் ஜெயசேகர கூறினார். தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் ஆதரவு குறைந்திருப்பதுடன், சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கு வாக்குக்கேட்டுச் செல்லும் அமைச்சர்களை அங்குள்ள மக்கள் விரட்டியடிப்பதாகவும் இதனால் கொழும்பில் இருந்து பல பேருந்துகளில் மக்களை ஏற்றிச்சென்ற கள்ளவாக்குப் பதிவில் ஈடுபட அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயா சிறி ஜெயசேகர குற்றம் சாட்டினார். ஓ

# வெள்ளி நற்சிந்தனை 33

## பக்தியின் மொழி தமிழ்

இறைவனுடைய திருவுருவைக் கண்டு வணங்கும் போது எமது கண்களால் அவன் கோலத்தைக் கூர்மையாகப் பார்க்கச் சம்பந்தர் வழிகாட்டுகிறார். குழந்தைப் பருவத்தில் காணுகின்றவற்றையெல்லாம் குறிப்பாகப் பார்க்கும் பழக்கமும் உண்டு. வயதில் இளையவரான சம்பந்தர் திருப்புகலியிலே வீற்றிருக்கும் இறைவனை நன்கு உற்றுப் பார்க்கிறார். அவர் கண்ட கோலம் இதுவரை காணாத கோலமாய்த் தெரிகிறது. மீண்டும் பார்க்கிறார். ஒவ்வொரு நாளும் சென்று பார்க்கிறார். தன் கண்களுக்குத் தென்பட்டதை எடுத்துரைக்கின்றார்.

மங்கைப்பருவத்துப் பெண்ணை உடம்பிலிலே ஒரு கூறாகக் கொண்டிருக்கிறான். அதை மிக உவப்போடு கொண்டிருக்கிறான். கையிலே மழுவை வைத்திருக்கிறான். நீண்ட சடையிலே திங்களை ஒருபுறம் சூடியிருக்கிறான். மறுபுறத்திலே கங்கை நதியை யாருங்காணாதபடி மறைத்து வைத்திருக்கிறான். அவனுடைய கண்டத்திலே கறை காணப்படுகிறது. இக் கோவிலில் இத்தகைய இறைவன் நம்மை எண்ணி வந்திருப்பது போற்றுதற்குரியது.

கோயிலின் சூழல் வயலாற் சூழப்பட்டது. சிவந்த கயல் மீன்கள் நிறைந்த குளிர்மையான பிரதேசம். இக்கோவிலுக்கு வந்து வழிபாடுசெய்யும் அடியவர்களுக்கு 'அவலம்' என்ற துன்பம் அறியாதது ஒன்றாகும். இங்கு கோவில் வழிபாடு பற்றிய கருத்தொன்றைச் சம்பந்தர் கூறியுள்ளார். அர்த்தநாரி வடிவத்தில் அமர்ந்திருக்கும் சிவனைக் கோவிலில் சென்று வழிபடுவதே நல்லது. இறைவன் விரும்பி உறையும் தலம் சிறப்புடையது. அப்பன் பாதி, அம்மை பாதியாக அமைந்த தோற்றம் சிறாருக்கு நல்ல வழிகாட்டியாகவும் அமைந்திருந்ததை உணர்த்துகிறார். கேட்பதைக் கொடுக்கும் இறைவன் தாயாகவும் தந்தையாகவும் இருப்பான். அதனால் அந்த இறைவனிடம் நாள் தோறும் சென்று வழிபாடு செய்ய வேண்டும். அழகியகைகளிலே தாமரை மொட்டுக்களைச் சமர்ப்பிப்பது போலக் கரங்களைக் குவித்து, தலைமேல் வைத்து வணங்க வேண்டும். அவ்வாறு அங்கையினால் வழிபடுப வர்களுக்கு அவலம் ஏற்படாது. எம்மை வருத்துகின்ற துன்பங்களில் மிகப்பெரிய துன்பம்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அவலமாகும். இத்தகைய துன்பத்தை நாமடையும் போது எமக்கு யாரும் துணையாக மாட்டார்கள். மனித நிலையால் இத் துன்பத்தை நீக்க முடியாது.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கள்வனெனக் குற்றம் சாட்டப்பெற்றுக் கொலையுண்ட செய்தி கேட்ட போது கண்ண கி அவ லம் கொண்டு அழுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார். அவ ளுடைய துன்ப நிலையை யாராலும் மாற்ற முடியாத நிலை. இத்தகைய துன்பத்தை மாற்ற வல்லவன் இறைவனே என்கிறார் சம்பந்தர்.

"மங்கை ஓர் கூறு உகந்த மழுவாளன் வார் சடைமேல் திங்கள்.
கங்கைதனைக் கரந்த கறைக் கண்டன் கருதுமிடஞ்
செங்கயல் வார் கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையினால் தொழுவார் அவலம் அறியாரே"

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

பகுதி -II
நேரம் 1மணி 15 நிமிடம்

மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 1-15 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

கண்டி மாவட்டத்தில் பேராதனைப் பகுதியில் சமந்த வசித்து வருகிறான். அவனது வீட்டுத் தோட்டத்தில் ஒரு பலா மரம் நின்றது. அதில் ஒவ்வொரு போகத்திலும் அதிக காய்கள் காய்த்தன. அவை மரங்களிலேயே பழுத்தன. வெளவால்கள், அணில்கள் குரங்குகள் எனப் பல பிராணிகள் அம்மரத்தை நாடி வந்தன. பழங்கள் கீழே விழுந்து வித்துக்கள் மரத்தின் கீழே பெருந்தொகையில் சிதறிக் காணப்பட்டன. அவை முளைத்தனவாயினும் காலப்போக்கில் நலிவடைந்து மடிந்தன.வெவால்கள் ,காகங்கள் கௌவிச் சென்ற சுளைகளின்வித்துக்கள் சுற்றாடலில் உள்ள பல பிரதேசங்களில் விழுந்து முளைத்து செழிப்பாக வளர்ந்தன. மழை நீருடன் அள்ளிச் செல்லப்பட்ட வித்துக்கள் அருகே இருந்த சதுப்பு நிலத்தை அடைந்தன எனினும் அங்கு எந்த வித்தும் முளைக்கவில்லை.


01. பேராதனை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?..........................................
02. சமந்தவின் பலா மரத்திற்கு வந்து சென்ற பிராணிகள் எவை?..........................................
03. பலாமரத்திற்கு எத்தனை மூலையூட்டிகள் வந்து சென்றன?..........................................
04. பந்தியில் வருகின்ற சினைப்பெயர் ஒன்று ?..........................................
05. பலாக்காயின் இளையது..........................................
06. நீர் என்பதன் ஒத்த சொல்..........................................
07. அருகே என்பதன் எதிர்ச்சொல்..........................................
08. மரத்தின் அடியில் முளைத்த கன்றுகள் ஏன் நலிவடைந்தன?..........................................
09. சதுப்பு நிலத்தில் ஏன் வித்துக்கள் முளைக்கவில்லை?..........................................
10. பந்தியில் வருகின்ற நீர் படிக்கின்ற பாடல்களில் ஒன்று ?..........................................
11. கையில் ஒட்டிய பலாப்பாலை நீக்க என்ன செய்ய வேண்டும்?..........................................

**ஆங்கிலத்தில் எழுதுக.**

12. மரங்கள் ..........................................13 பலாப்பழம்..........................................
14. நின்றது என்ற சொல்லின் எதிர்காலம்..........................................
15. சமந்த தமிழ்கதைப்பான், ஆங்கிலம் வாசிப்பான், விகாரைக்குச் செல்வான் எனின் அவனது மதம்..........................................

***16- 17 ஆம் வினாக்களுக்கு படங்களுக்கு பொருந்தமான பழமொழிகளை இடை வெளியில் எழுதுக.***


16.  ..........................................

17.  ..........................................

***18-20 வரையான வினாக்களில் தரப்பட்ட விவரணங்களில் ஒரு கூற்று பிழையானது அதன் கீழ்க் கோடிடுக.***

18. மழை பெய்வதற்கு முன்பாக பிராணிகளின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றம்?
    1. எறும்புகள் கூட்டம் கூட்டமாகச் செல்லும்
    2. ஆண்மயில் தோகை விரித்தாடும்
    3. தூக்கணாங் குருவிகள் வானில் தாழப்பறக்கும்
    4. தவளைகள் கத்தத் தொடங்கும்
19. வீட்டுத்தோட்டம் ஒன்றிலே காணக்கூடியது
    1. சுற்றிவர வேலி அடைக்கப்பட்டிருக்கும்
    2. பல்வகை மரம், செடி, கொடிகள் இருக்கும்
    3. கோழிக்கூடுகள் கட்டப்பட்டிருக்கும்
    4. நீர் பாய்ச்சும் வசதி இருக்கும்
20. வீதியில் நடந்துசெல்லும் பாத சாரிகள் பின்பற்ற வேண்டியது
    1. ஒருவர் பின் ஒருவராக நடந்து செல்ல வேண்டும்.
    2. வீதியின் இடது புறமாக நடந்து செல்லல்
    3. வீதியின் வலது புறமாக நடந்து செல்லல்
    4. பாதசாரிகள் கடவையால் கடத்தல் வேண்டும்.

21-30 வரையான வினாக்களுக்கு படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




21. நாற்சந்தியில் சந்திக்கும் வீதிகள் எவை?

Aயிலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற ராகவன் சந்தியில் வலது பக்கமாக திரும்பி பிரதான வீதியை அடைந்து இடது பக்கமாகத் திரும்பி கண்டி வீதியை அடைந்தான்.

22. வலது பக்கமாக அவன் சென்ற திசை எது?
23. பின் இடது பக்கமாக அவன் சென்ற திசை எது?
24. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு புறப்பட்ட ஒருவர் எத்தனை கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டும்?
25. பாருக் A யிலிருந்து கண்டி வீதிக்கு ஆட்டோவில் வருகின்றான். கட்டணமாக கிலோமீற்றர் தூரத்திற்கு 60 ரூபா செலுத்த வேண்டும் அவன் செலுத்தவேண்டிய ஆட்டோக்கட்டணம் எவ்வளவு?


சந்தையின் எல்லைகளை எழுதுக?


26. வடக்கு ..........................................27. தெற்கு ..........................................
28. கிழக்கு. ..........................................29. மேற்கு..........................................
30. மேலே உள்ள பாடசாலை கலவன் பாடசாலை ஆகும்.

இங்கு கல்வி கற்பவர்கள் யார்?..........................................


மஞ்சள், சிவப்பு , நீலம் என்ற மூன்று நிறங்களில் மின் குமிழ்கள் எரிந்த வண்ணம் உள்ளன. ஒவ்வொரு நிறத்திலும் மும்மூன்று மின் குமிழ்கள் தொடர்ந்து எரிந்த வண்ணமுள்ளன.

31. 12ஆவது மின் குமிழின் நிறம்?
32. 14 ஆவது மின் குமிழின் நிறம்?
33. கீழே மூன்று கடிகாரங்களில் முற்பகல் நேரங்கள் காட்டப்பட்டுள்ளன. கண்ணாடியில் பார்க்கும் நேரமும் உண்மையான நேரமும் சரியானதாக காட்டும் கடிகாரத்தின் கீழ் புள்ளடி இடுக.



34. 


இவ் உருவின் சுற்றளவைத் தருக.

35. 

புள்ளடியிட்ட பகுதியை தசமத்தில் தருக?..........................................

36. ஒரு எண்ணுடன் 5ஐக்கூட்டி வரும் எண்ணை 3ஆல் பெருக்கி வரும் விடையிலிருந்து 9ஐக் கழித்தால் வருவது 30 எனின் அவ் எண் என்ன?..........................................
37. சிவரூபன் 30ரூபாவைக்கொடுத்து 3 மாம்பழங்களையும் 2 விளாம்பழங்களையும் கேட்டான். ஒரு மாம்பழம் 5 ரூபா ஆகும். அவ்வாறு தருவதாயின் வியாபாரி அவனிடம் 5 ரூபா தருமாறு கோட்டான் எனின் ஒரு விளாம்பழத்தின் விலை என்ன?..........................................

**கீழே தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

38.  அய்யே, கப்புட்டா களு பாட்டாயி..........................................

39. நங்கி, கிரவா கொள பாட்டாயி .......................................... 

**கீழே தமிழில் தரப்பட்டுள்ள வசனங்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

40. நான் உள்ளே வரலாமா? ..........................................
41. நீ என்ன செய்கிறாய்?..........................................

**சுருக்க விடை தருக.**

42. மாகாணத்தின் முதல்வர் யார்?..........................................
43. மரக்கலத்தில்; துடுப்பு வலிப்பவர் இருக்கும் இடம்?..........................................
44. வளி அதிகம் உள்ள மண்..........................................

**கீழே தரப்பட்டுள்ள படத்தைப்பார்த்து வினாக்களுக்கு விடை எழுதுக.**



45. மாட்டின் கழுத்திலேயே வைக்கப்பட்டுள்ளது?..........................................
46. படத்தில் மாட்டின் எத்தனை கால்கள் தெரிகின்றன?..........................................
47. இங்கே நடைபெறும் தொழிற்பாடுகள் இரண்டு தருக?..........................................
    2..........................................
48. உழவன் கையிலே வைத்திருப்பது ..........................................
49. மாடுகளின் தொழிலை தற்போது செய்யும் இயந்திரம்..........................................

**சஞ்சீவன் ஆக்கப்பாடத்திற்கு செய்த உபகரணம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.**



50. இதன் பெயர் என்ன?

இதனைச் செய்வதற்கு பயன்படுத்தும் மூன்று பொருட்கள்

51..........................................52..........................................
53..........................................

***54-60 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட நிகழ்வைத் தொடர்ந்து எழுவாய், பயனிலை, செயற்படு பொருளுடன் கூடிய வசனங்களில் எழுதுக.***

அன்று ஒரு நாள் மாலை கடும் மழையில் நனைந்த நான்..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

# 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சலில் சீன வீராங்கனை புதிய சாதனை

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த பெண்களுக்கான 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் பிரிவில் சீன வீராங்கனை லியூ தங்கம் வென்றதோடு புதிய உலக சாதனை படைத்தார்.

அவர் பந்தய தூரத்தை 2 நிமிடம் 4.18 விநாடியில் கடந்தார். இதற்கு முன்பு அவுஸ்திரேலிய வீராங்கனை ஜெசிகா 2 நிமிடம் 5.40 விநாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

மற்றொரு சீன வீராங்கனை ஜியோ லியாங் வெள்ளிப் பதக்கமும் அவுஸ்திரேலிய வீராங்கனை ஜெசிகா வெண்கலமும் பெற்றனர்.

இதேபோல் பெண்களுக்கான 4X200 மீற்றர் பிரி ஸ்டைல் தொடர் நீச்சலில் அவுஸ்திரேலியா (ரைஸ், பார் பரட், பால்மர்தே, மெகன்சி) 7 நிமிடம் 44.31 விநாடியில் கடந்து புதிய உலக சாதனை படைத்துத் தங்கம் வென்றது.



அமெரிக்கா 7 நிமிடம் 50.09 விநாடியில் கடந்ததே முன்னைய சாதனையாகும். சீனாவுக்கு வெள்ளிப் பதக்கமும் அமெரிக்காவுக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

ஆண்கள் 200 மீற்றர் பேக்ஸ்டிரோக் நீச்சலில் யப்பான் வீரர் கிடா ஜிமா 2 நிமிடம் 07.64 விநாடியில் கடந்து தங்கப் பதக்கம் பெற்று புதிய ஒலிம்பிக் சாதனை படைத்தார்.


தனது முன்னைய சாதனையை அவர் முறியடித்தார். அவுஸ்திரேலியா, பிரான்ஸுக்கு முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

100 மீற்றர் பிரிஸ்டைல் பிரிவில் பிரான்ஸ் வீரர் பெர்னார் 47.21 விநாடியில் கடந்து தங்கம் வென்றார். சுலிவன் (அவுஸ்திரேலியா வெள்ளியும் லெசாக் (அமெரிக்கா வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

# பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 22 | 8 | 5 | 35 |
| அமெரிக்கா | 10 | 9 | 15 | 34 |
| ஜேர்மனி | 7 | 2 | 3 | 12 |
| தென்கொரியா | 6 | 7 | 3 | 16 |
| இத்தாலி | 6 | 4 | 3 | 13 |
| அவுஸ்திரேலியா | 5 | 4 | 7 | 16 |
| ஜப்பான் | 5 | 3 | 3 | 11 |
| ரஷ்யா | 3 | 8 | 3 | 14 |
| பிரான்ஸ் | 2 | 7 | 6 | 15 |
| பிரித்தானியா | 2 | 2 | 3 | 7 |
| செக்குடியரசு | 2 | 1 | – | 3 |
| ஜோர்ஜியா | 2 | – | 1 | 3 |
| கியூபா | 1 | 3 | 2 | 6 |
| நெதர்லாந்து | 1 | 2 | 4 | 7 |
| வடகொரியா | 1 | 2 | 4 | 7 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 1 | 4 |
| ரோமானியா | 1 | 1 | 2 | 4 |
| மொங்கோலியா | 1 | 1 | – | 2 |
| சுலோவாக்கியா | 1 | 1 | – | 2 |
| உக்ரைன் | 1 | – | 4 | 5 |
| சுவிட்சர்லாந்து | 1 | – | 3 | 4 |
| ஸ்பெயின் | 1 | – | 1 | 2 |
| பின்லாந்து | 1 | – | 1 | 2 |
| இந்தியா | 1 | – | – | 1 |
| தாய்லாந்து | 1 | – | – | 1 |
| ஹங்கேரி | – | 3 | 1 | 4 |
| சிம்பாவே | – | 3 | – | 3 |
| கஜகஸ்தான் | – | 2 | 2 | 4 |
| சுவீடன் | – | 2 | 1 | 3 |
| அல்ஜீரியா | – | 1 | 1 | 2 |
| ஆஸ்திரியா | – | 1 | 1 | 2 |
| ஹர்கிஸ்தான் | – | 1 | 1 | 2 |
| துருக்கி | – | 1 | 1 | 2 |
| கொலம்பியா | – | 1 | – | 1 |
| நோர்வே | – | 1 | – | 1 |
| சுலோவேனியா | – | 1 | – | 1 |
| வியட்நாம் | – | 1 | – | 1 |
| ஆர்மேனியா | – | – | 4 | 4 |
| பிரேஸில் | – | – | 4 | 4 |
| பெலாரஸ் | – | – | 2 | 2 |
| இந்தோனேசியா | – | – | 2 | 2 |
| சீனா தைபே | – | – | 2 | 2 |
| ஆர்ஜென்டினா | – | – | 1 | 1 |
| பல்கேரியா | – | – | 1 | 1 |
| குரோஷியா | – | – | 1 | 1 |
| டென்மார்க் | – | – | 1 | 1 |
| எகிப்து | – | – | 1 | 1 |
| லிதுனியா | – | – | 1 | 1 |
| மெக்ஸிக்கோ | – | – | 1 | 1 |
| தஜிகிஸ்தான் | – | – | 1 | 1 |
| ரூகோ | – | – | 1 | 1 |
| உஸ்பெஸ்கிஸ்தான் | – | – | 1 | 1 |

# விறுவிறுப்பான தடகளம் இன்று ஆரம்பம்



போல்ட்

(பீஜிங்)

மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒலிம்பிக் தடகளப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. லியு ஜியாங், உசைன் போல்ட், இசின்பீவா உள்ளிட்ட நட்சத்திரப் பட்டாளம் புதிய சாதனை படைக்கக் காத்திருக்கின்றது.





வழக்கமாக ஒலிம்பிக் போட்டிகளில் கடைசி பத்து நாள்கள் நடக்கும் தடகளப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. ஒலிம்பிக் போட்டிகளில் தடகளம் மிக பிரபலம் என்பதால் ஒவ்வொரு போட்டியிலும் கடும் சவால் காத்திருக்கின்றது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் தடகளத்தில் மட்டும் அமெரிக்கா 25 பதக்கம் வென்றுள்ளது. கடந்த ஆண்டு ஓசாகாவில் நடந்த உலக சம்பியன்சிப் போட்டியில் அமெரிக்கர்கள் 26 பதக்கம் வென்றனர்.

இவர்களுக்கு சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் பங்கேற்கும் சீனர்கள் இடையூறு அளிக்கலாம்.

இவர்களைத் தவிர்த்துப் பதக்கம் கைப்பற்ற ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி வீரர், வீராங்கனைகளும் கடும் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

**போல்ட் ரெடி**

உலகின் அதிக வேக வீரர் யார் என்பதை முடிபு செய்யும் 100 மீற்றர் தடகளத்தில் இன்று தகுதிச்சுற்றுப் போட்டிகள் நடக்கின்றன. இதில் தங்கம் வெல்ல மும்முனைப் போட்டி நிலவுகின்றது.

என்றாலும் அனைவரின் எதிர்பார்ப்பும் சமீபத்தில் 9.72 விநாடிகளில் கடந்து உலக சாதனை படைத்த ஜமெக்காவின் உசைன் போல்ட் மீதுதான் உள்ளது.

200 மீற்றர் ஓட்டத்திலும் இவர் பங்கேற்பதால் மற்றவர்களுக்கு வாய்ப்புக் குறைவுதான். இவருக்குப் போட்டியாக இருக்கும் சக வீரர் அசாபா பாவெல் காயத்திலிருந்து முழுமையாகக் குணமடைந்துள்ளார்.

இவர்கள் இருவரும் 400 மீற்றர் தொடர் ஓட்டத்திற்கான ஜமெக்கா அணியில் இடம்பெற்றிருப்பதால் தங்கம் நிச்சம் கைப்பற்றலாம். அமெரிக்க வீரர் டைசன் கேயும் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வெல்லும் உறுதியுடன் களமிறங்குகின்றார்கள்.

இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக சில மாதங்களாக போட்டிகளில் பங்கேற்காத போதிலும் ஜமெக்கா வீரர்களுக்கு கடும் சவால் தருவார் என நம்பலாம்.

**சீனாவின் நம்பிக்கை**

110 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் சீனாவின் லியு ஜியாங் தங்கம் வெல்லும் வாய்ப்பு அதிகம் இருக்கின்றது.

2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கலக்கிய இவர் இம்முறை சாதனையுடன் வெல்வேன என்ற சபதத்துடன் களம் காண்கிறார்.

**எதியோப்பியா ஆதிக்கம்**

நீண்ட தூரப் போட்டிகளான 10 ஆயிரம் மீற்றர் மரதன் போன்ற போட்டிகளில் ஆதிக்கம் செலுத்த எதியோப்பியா மற்றும் கென்ய அணிகள் கடுமையாக மோதக் காத்திருக்கின்றன.

**பாலா**

பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் எதியோப்பியாவின் டிருனேஷ் திபாபா சாதிக்கத் தயாராக வருகின்றார். கடந்த முறை 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வெண்கலம் வென்ற இவர், அதன் பின்னர் நடந்த மூன்று உலக சம்பியன்சிப் போட்டிகளில் முதலிடம் பிடித்துள்ளார்.

ஏதென்சில் 10 ஆயிரம் மீற்றர் போட்டியில் தங்கமும் 5 ஆயிரம் மீற்றர் போட்டியில் வெள்ளியும் வென்ற எதியோப்பியாவின் கெனினிசா பிகிலே இம்முறை 2 போட்டிகளிலும் தங்கம் வென்று சாதிக்கலாம்.

## சீன வீரர்கள் ஆதிக்கம்

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக் பட்மின்டன் போட்டிகளில் சீன வீரர்கள் ஆதிக்கம் அதிகமாகவுள்ளது. நேற்று நடந்த ஆண்களுக்கான காலிறுதிப் போட்டி ஒன்றில் சீன வீரர் ஜின் சென் தைபேயின் யு ஹிசிங்கை 21-8, 21-14 என்ற நேர் செட்களில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

## மழையால் ஒலிம்பிக் போட்டிகள் கடும் பாதிப்பு

(பீஜிங்)

சீன தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வருகின்றன. நேற்றைய போட்டிகள் பெரும்பாலும் மழையால் கடுமையாகத் தடைப்பட்டுள்ளன. டெனிஸில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஒற்றையர் மற்றும் இரட்டையர் காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடக்க இருந்தது.

திடீரென பெய்த மழை காரணமாகத் தடைப்பட்டன. இதேபோல் சொப்ட் போல், பேஸ் போல் போட்டிகளும் தடைப்பட்டுள்ளன. ஜேர்மனி, கிரீஸ் அணிகள் இடையிலான பெண்கள் பீச் பொலிபோல் போட்டிகள் கடுமையான மழையிலும் தொடர்ந்து நடந்தது.

## வில்வித்தையில் சீன மங்கை தங்கம் வென்றார்

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக் பெண்கள் தனிநபர் வில்வித்தைப் போட்டியில் சீன வீராங்கனை ஜுவான் சாங் தங்கம் வென்றார். கொரிய வீராங்கனை கள்சுங்ஹியுன்பார்க்வெள்ளியும்ஒக் ஹியுன் வெண்கலமும் பெற்றனர்.

## யப்பான் வீரருக்கு தங்கம்

(பீஜிங்)

ஆண்களுக்கான 200 மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரோக் நீச்சல் போட்டிகளில் யப்பான் வீரர் கிதாஜிமா கொசுகே தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இந்தப் பிரிவில் அரையிறுதியில் ஒலிம்பிக் சாதனை படைத்து இறுதி போட்டிக்கு முன்னேறிய அவர் மீண்டும் ஒரு ஒலிம்பிக் சாதனை படைத்து முதலிடத்தைப் பிடித்தார்.

இந்தப் பிரிவில் அவுஸ்திரேலிய வீரர் பிரென்ட்ன் ரிக்கர் வெள்ளிப் பதக்கத்தையும் பிரான்ஸ் வீரர் டூபுஸ்க் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். யப்பான் வீரர் கிதாஜிமா 100 மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரோக் பிரிவில் உலக சாதனையோடு தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் ஆரம்ப விழாவில்

# முக அழகிற்காக சிறுமியை மாற்றியது அம்பலமானது



வாயை அசைத்து ஆடிய சிறுமி



பாடிய சிறுமி

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக் ஆரம்ப விழாவைப் பார்த்து உலகமே அசந்து போனது. அந்த அளவுக்கு பிரமாண்டமாகவும் கோலாகலமாகவும் சீனா நடத்தியது.

ஆரம்ப விழாவில் 9 வயதான லின் மியோக் என்ற சிறுமி, சீனாவின் பிரபலமான புரட்சிகரமான பாடலை படுவதுபோல் காட்டினார்கள்.

அந்த இனிமையான குரல் எல்லோர் மனத்திலும் ரம்மியமாக ஒலித்ததை உணர முடிந்தது. இந்த நிலையில் அந்தப் பாடலை லின் மியோக் பாடவில்லை. அவர் வெறும் வாயை மட்டுமே அசைத்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

முதலில் இந்தப் பாடலைப் பாட தேர்வு செய்யப்பட்டவர் 7 வயதான யாங் பேய் என்ற சிறுமி. இனிமையான குரல் வளம் கொண்ட அந்த சிறுமிக்கு பற்கள் வரிசையுடன் அழகாக அமையவில்லை.

அந்த ஒரே காரணத்திற்காக அந்த சிறுமியை ஆரம்ப விழாவில் இலட்சக் கணக்கானோர் முன்னிலையில் நிறுத்த ஒலிம்பிக் குழு விரும்பவில்லை.

இதையடுத்து மாற்று ஏற்பாடாக லின் மியோக்கை தேர்வு செய்து மேடையில் தோன்ற வைத்து வாயை மட்டும் அசைக்க வைத்தனர்.

பின்னணியில் அந்தப் பாடலை யாங் பேய் இனிமையாகப் பாடி முடித்தாள். அழகுக்காக ஒரு குழந்தையின் ஆனந்தத்தை அடியோடு பொசுக்கிய போட்டி அமைப்பாளர்களின் ஆள் மாறாட்ட வித்தை சீனாவில் சலசலப்பை ஏற்படுத்தியதுடன் சர்வதேச அரங்கில் அந்த நாட்டின் மதிப்பையும் சீர்குலைப்பதுபோல் அமைந்து விட்டது.

படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# விவசாயக் கண்காட்சி இன்றும் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தையும் அதன் சூழலிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம், செயற்கை முறை சினைப்படுத்தும் நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி, ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று 15 ஆம் திகதியும் தொடர்ந்து நடைபெறும் என விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ)

# உதைபந்தாட்டம்

(பருத்தித்துறை)

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடாத்தப்படும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டியில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

நேற்றைய போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் 5.1 என்ற கோல்களால் வெற்றியீட்டியது. (ச-52)

# பொலிஸார் பக்கச்சார்பின்றி விசாரணை மேற்கொள்ள வேண்டும்

## கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பொலிஸார் தமது கடமைகளை உரிய வகையில் மேற்கொள்ள வேண்டுமென கொழும்பு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வா சிரச தொலைக்காட்சி ஊடகவியலாளர்களை தாக்கிய சம்பவம் தொடர்பான விசாரணையின் போதே இந்த உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் உரிய விசாரணைகளை நடத்தவில்லையென குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் மேர்வின்சில்வா குழுவினரால் தாக்குதலுக்குள்ளான சிரச தொலைக்காட்சியின் இரண்டு ஊடகவியலாளர்களில் ஒருவரின் ஒளிப்பேழையை வெளிக்கொணர்ந்தால் அது தமது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துமெனக் கருதுவதால் அதிலுள்ள காட்சிகளை வெளிப்படுத்தக் குறித்த ஊடகவியலாளர் தயங்குவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தீவக கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தீவககல்வி பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இன்று வெள்ளிக்கிழமையும் 20,26, 27,28 ஆம் திகதிகளிலும் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ)

# இராமநாதபுரத்தில் பத்துப்பேர் கைது

(இராமநாதபுரம்)

இராமநாதபுரம் தேவிபட்டினம் கரையோரப் பகுதியில் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பல அத் தியாவசியப் பொருட்களைத் தமிழகப் பொலிஸார் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல் முயற்சியில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் 10 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொருட்களைக் கடத்த முற்பட்ட இலங்கையைச் சேர்ந்த வள்ளம் ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தேவிபட்டினம் பிரதேசத்தில் தீவிர சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகப் பொலிஸாரின் உளவுப் பிரிவினரால் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ச-5)

# வரலஷ்மி விரத பூசை

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வரலஷ்மி விரத பூசை நடைபெறவுள்ளது. (ஓ)

# இலங்கைத் தமிழருக்கு இந்தியாவில் சிறைத்தண்டனை

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய கேரள மாநிலத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கையருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த முத்தையா சபாரத்தினம் என்பவருக்கே கேரள நீதிமன்றம் இரண்டரை வருட கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

உரிய ஆவணங்களை கொண்டிராத நிலையில் கேரளாவின் நெடும்காண்டம் நகரில் இவர் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டில் இதுவரை 55 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# வரலஷ்மி விரதம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வரலஷ்மி விரத விசேட அபிசேகப் பூசைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ச-5)

# மாணவர்களின் பேரணி...

சந்திவரை இடம்பெற்றது.

பேரணியைக் கலைப்பதற்காக மாணவர்களின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டனர்.

பல்கலைக்கழகங்களை தனியார் மயப்படுத்தக் கூடாது, மாணவர்களுக்கான சலுகைகளை குறைக்கக்கூடாது, பாடசாலை நிரந்தரமாக மூடப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

14 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் பங்கு பற்றியிருந்தனர். அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை தாங்கியி ருந்த மாணவர்கள் கோஷங்களை எழுப்பிய வாறு ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவென சுமார் 100 மீற்றர் நீளமான மகஜர் ஒன்றினையும் தாங்கி வந்தனர்.

ஆனால் இவர்களது ஊர்வலம் கொள்ளுப்பிட்டி சுற்று வட்டத்தினை அடைந்ததும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கலகம் அடக்கும் பொலிஸார் இவர்கள் அதற்கு மேல் செல்ல அனுமதி மறுத்து வீதித்தடைகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

ஆனால் ஆர்ப்பாட்டக்காரர் அதனையும் தாண்டி பலாத்காரமாக செல்ல முயன்ற போது பொலிஸார் அவர்கள் மீது சரமாரியாக கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியதோடு தண்ணீரையும் பீச்சியடித்து கூட்டத்தை கலைத்தனர். (ச-5)

# கிளிநொச்சி ...

ஆதரவு தரவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி, அமைச்சரவை அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு படையினர் கிளிநொச்சியை நெருங்கிவிட்டதாகவும் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பிரதேசத்தில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-5)

# மோதல்கள்...

மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான உதவிகளை உள்ளடக்கி ஐ.சி.ஆர்.சி நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்கள் உள்ளிட்ட வன்னிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் தீவிரமடைந்ததையடுத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகள் சொத்துக்களை கைவிட்டு பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் ஐ.சி. ஆர்.சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# விடுதலைப் புலிகள் ...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்காது அரசாங்கத்துக்கு சார்பரன தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு சலுகைகளை வழங்குவதனால் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்களின் ஆதரவினை பெறும் வரையில் இலங்கை அரசாங்கம் யுத்தத்தில் வெற்றி பெற முடியாது என்று இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் கருத்துத் தெரிவித்துள்ளமை குறித்துக் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து ரில்வின் சில்வா மேலும் கூறியுள்ளதாவது, விடுதலைப் புலிகளை பாதுகாக்கும் தேவை இந்தியாவுக்கு உள்ளது. ஏனெனில் இலங்கையில் பிரச்சினைகள் தொடர்ந்தால்தான் இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் பிராந்திய பாதுகாப்பு என்பவற்றில் வல்லரசாகத் திகழமுடியும்.

எனவே புலிகள் தோல்வியடைவதை இந்தியா விரும்பாது. அதன் வெளிப்பாடே நாராயணனின் கருத்தாகும்.

அத்தோடு அதிகாரப் பரவலாக்கலை இங்கு மேற்கொள்ள வேண்டுமென்று அழுத்தமும் மறைமுகமாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பிரிவினை வாதத்தை தோல்வியடையச் செய்ய முடியாது. அது மீண்டும் துளிர்விடும்.

ஆனால் அரசாங்கம் இந்தியாவிடம் மண்டியிட்டுள்ளது. நாட்டின் வளங்களையும் தாரை வார்த்துள்ளது. படையினரால் கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டது. ஆனால் அங்கு வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கி அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. மாறாக இந்தியாவின் தேவைக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அரசாங்கத்துக்கு சார்பானவர்களிடம் அப் பிரதேசத்தை ஒப்படைத்தது. இவ்வாறான செயற்பாடுகள் தமிழ்மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.

பிரபாகரனையும் முதலமைச்சராக்கி வட பகுதி அதிகாரத்தை வழங்க முடியும்.

ஆனால் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டுமென அமைச்சர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு ஆயுதமேந்தியவர்களுக்கும் பிரிவினைவாத சிந்தனையுடையோருக்கும் அதிகாரங்களை வழங்குதென்பது நாட்டை முழுமையான பிரிவினைவாதத்திற்கு தள்ளும் செயற்பாடாகும். (ச-5)

# வடக்கில் இடம்பெயரும்...

காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை தொண்டு நிறுவனங்கள் சென்றடைய தொடர்ந்து இடம் தர வேண்டும் என்றும் அப்போது தான் ஒரு மனிதாபிமான பேரவலம் தவிர்க்கப்படலாம் என்றும் ஐ.நா மன்றம் கேட்டுள்ளது.

மக்களெல்லாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் தலைநகராக இயங்கிக் கொண்டிருக்கும் கிளிநொச்சியை நோக்கியே நகர்ந்து அங்கு கூடிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கப் படைகள் இந்தப் போரில் வெற்றி பெற்றாகவேண்டுமானால் இந்தக் கிளிநொச்சிதான் முக்கிய மோதல் களமாக மாறும் என்பது குறிப்பிடத்தக்கது என ஐ.நா மன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை யூன் மாதம் முதல் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளது. கடந்த சில வாரங்களில் என்ன இடம்பெற்றது என்பதைப் பொறுத்தே இடப்பெயர்வுகளும் அதிகரித்திருக்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மனித நேயப் பணிகளின் இணைப்பதிகாரி நெய்ல் புனே கூறியுள்ளார்.

அங்கு இடம்பெயர்ந்தவர்களுக்கான மனித நேய உதவிகளை முன்னெடுப்பதற்கான பாதுகாப்பான சூழ்நிலை காணப்படுமாயின் மனித நேயப் பணிகளை முன்னெடுப்போம். மக்கள் சுதந்திரமாக இடம்பெயர்வதற்கும் நடமாடுவதற்கும் இரு தரப்பினரும் அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு நடந்து கொண்டால் அங்கு மனித நேயப் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல்இருக்காது என அவர் தெரிவித்தார். (ச-5)

# வன்னிப் பெரு நிலப்...

பயங்கரவாதம் என்பது இன்று நேற்றல்ல 50 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழினப் படுகொலையை திட்டமிட்டு மேற் கொள்ளத் தொடங்கிவிட்டது.

1948ஆம் ஆண்டில் இலங்கை விடுதலை பெற்றதாகக் கூறப்படும் நாளில்இருந்து ஆட்சியில் இருந்தவர்கள் தமிழர்களை அழித்தொழிப்பதற்காக தமிழ்மக்கள் மீதான படுகொலைகளை தொடங்கி இருந்தனர்.

அறவழியினை நம்பி போராடிய தமிழ்த் தலைவர்களும் சிங்கள பயங்கரவாதத்தினால் தாக்கப்பட்டனர். 1956ஆம் ஆண்டில் சிங்கள தனிச்சட்டத்திற்கு எதிராக காலிமுகத்திடலில் அகிம்சை வழியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ்த் தலைவர்கள், தொண்டர்கள் தாக்கப்பட்டனர்.

தொடர்ச்சியாக தமிழினத்துக்கு எதிராக கொக்கட்டிச்சோலை படுகொலை உட்பட பல படுகொலைகளை சிங்கள பயங்கரவாதம் நிகழ்த்தியிருக்கிறது.

சிங்கள அரச பயங்கரவாதத்தின் தொடர்ச்சியாகவே செஞ்சோலை மாண்விகள் மீதான படுகொலையை நிகழ்த்தியதன் மூலம் உலகிலேயே படுகொலைகளை நிகழ்த்தும் முதல் நாடாக இலங்கை தன்னை பதிவாக்கியுள்ளது.

சிங்கள அரசு படை நடவடிக்கை ஒன்றினை இன்று மேற்கொண்டுள்ளது. தனது படை நடவடிக்கைதொடர்பானமிகையான தகவல்களை சிங்கள மக்களுக்கு அரசு வழங்கி வருகிறது.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை விட்டு புலிகள தந்திரோபாய பின்வாங்கலை மேற்கொண்டபோது அரசாங்கம் 80 விழுக்காடு புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று கூறிய சூழலில்தான் ஓயாத அலைகள் நிகழ்த்தப்பட்டு ஆயிரக்கணக்கில் சிங்களப் படைகள் கொல்லப்பட்டு மிகப் பெரிய நடவடிக்கையான ஜெயசிக்குறு நடவடிக்கை முறியடிக்கப்பட்டதும் எல்லோருக்கும் தெரியும்.

இன்று கூட சிங்களப் படை அகலக்கால் விரித்து -தமிழ் மக்களின் நிலங்களினை விழுங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தகுந்த பதிலடியை தமிழினம் கொடுக்கும் காலம் நெருங்கி வருகின்றது.

சிங்களப் பேரினவாதம் தமிழினத்துக்கு எதிராக மேற்கொண்ட படுகொலைகளை நினைவு கூருவது தமிழினம் விடுதலைக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு உந்துசக்தியாக இருக்கும் என்றார் அவர். (எ-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.